
# கவி பாடிய காவலர்



பா. து. கண்ணப்ப முதலியார்

# கவி பாடிய காவலர்


எழுதியவர் :

வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார்

தமிழ் விரிவுரையாளர்

புதுக் கல்லூரி, இராயப்பேட்டை, சென்னை



வெளியிட்டவர் :

அம்பிகா பிரதர்ஸ்

எடுகேஷனல் பப்ளிஷர்ஸ்

மயிலாப்பூர் :: சென்னை



உரிமை-பதிவு செய்யப்பட்டது



1954

[விலை. 14 அணா

முதற் பதிப்பு—1954

Kabeer Printing Works, Madras (2637)

# முகவுரை

சங்கம் மருவிய நூற்கள் ஒரு தமிழ்ச் சுரங்கம். அச் சுரங்கம் தன் அகத்தே பல பொருள்களைக் கொண்டு திகழ வல்லது; எடுக்க எடுக்கச் சுரந்த வண்ணம் இருக்க வல்லது. அச் சுரங்கத்தினின்றும் பல பொருள்களை எடுக்கும் யான், இதுபோது அரசர் குடியினராய் இருந்தவர்களும் அருங் கவி களாக இருந்திருக்கின்றனர் என்பதை மாணவ உலகம் அறிந்து கொள்ளும் பொருட்டுக் கவி பாடிய காவலர் என்ற பெயரால் இந் நூலினை உரை நடை யில் எழுதியுள்ளேன். சேர சோழ பாண்டின் என்ற முறைப் படுத்திக் கூறப்புட்டு வருதல் மரபாய் இருத்தலின், அவ்வரச மரபுப்படி முறைப் படுத்திக் கவி பாடிய காவலர்களை அமைத்துள்ளேன். இளந் திரையர் முடியுடை மூவேந்தர் குடியுடன் வைத்து எண்ணுதற்கு இன்றிக் குறுநில மன்னராகவே குறிக் கப்படுதலின், இறுதிக்கண் அவரை நிறுத்தி யுள்ளேன்.

"அம்மை அப்பர் அகம்"
77, அவதானம் பாப்பையர் வீதி
சூளை, சென்னை.
6–9–1954.

பா. து. கா.

# பொருள் அடக்கம்

## சேரர்

1. பாலை பாடிய பெருங் கடுங்கோ. ... 1
2. சேரமான் கணைக்கால் இரும்பொறை. ... 6
3. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை ... 10

## சோழர்

4. சோழன் நல்லுருத்திரன். ... 14
5. சோழன் நலங்கிள்ளி. ... 19
6. இரும்பிடர்த் தலையார். ... 25
7. கோப்பெருஞ் சோழன். ... 30
8. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். ... 38

## பாண்டியர்

9. அண்டர் மகன் குறுவழுதி ... 51
10. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். ... 56
11. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன். ... 59
12. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி ... 64
13. பாண்டியன் அறிவுடை நம்பி. ... 68
14. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். ... 72

## தொண்டைமான்

15. தொண்டைமான் இளந்திரையன் ... 79
பயிற்சி ... 86

# 1. பாலை பாடிய பெருங் கடுங்கோ

பாலை பாடிய பெருங் கடுங்கோ என்னும் அரசர் ஒரு புலவரே. இவர் அரசர் என்பதற்கு அறிகுறியாக இவரது பெயரின் ஈற்றில் **கோ** என்னும் சொல் நின்று சிறப்பிப்பதே காரண மாகும். கோ என்னும் சொல் அரசர் என்னும் பொருளைத் தந்து நிற்கும். இம் மன்னர் சேரர் குடியினர் என்பதைச் **சேரமான்** பாலை பாடிய பெருங் கடுங்கோ என்று குறிப்பிடப் படுவதினின்றும் உணரலாம். இவர் போரில் பகைவர் முன்னே கடுமையாக இருத்தல் பற்றிக் கடுங்கோ என்று அழைக்கப்பட்டனர் போலும்! அக்கடுமையும் சிறிதாக இராமல் பெரிதாகவே இருந்தது பற்றிப் பெருங் கடுங்கோ என்றே பேசப்பட்டார் என்றும் கருதலாம். "படுகளத்தில் ஒப்பாரி ஏது?" ஆனால், போர்க்களத்தில் பகைவர் முன்பு தான் இந்தக் கடுமை இருந்ததே அன்றி, இரவலர் முன்பு இந்தக் கடுமையினைக் காண முடியாது. ஏனெனில், இவரைப் பற்றிப் **பேய் மகள் இள எயினி** என்னும் புலவர் பெருமாட்டியார் பாடுகையில், மகளிர் சிற்றில் இழைத்து விளையாடிக் கொண்டிருந்தபோது பதுமைகட்கு மலர்களைப் பறித்துத் தந்தவர் என்றும், தம்மைப்பாடிய பாடினுக்கு அணி

கலம் ஈந்தவர் என்றும், பாணனுக்குப் பொன் தாமரையும் வெள்ளி நாரும் கொடுத்தவர் என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆகவே, இவர் வீர நெஞ்சினர் ஆயினும், கூடவே ஈர நெஞ்சும் உடையவர். இத்தகைய வீரமன்னர் அரசப் பொறுப்பினை ஏற்று நடத்தியதோடு இன்றி, அவ்வப்போது அருங்கவிபாடி அகம் மகிழ்பவராகவும் காணப்பட்டார். அப்படிப் பாடும் பாவில் பாலை நிலத்தின் இயல்பினை நன்கு பாடிய காரணத்தால் **பாலை பாடிய** பெருங் கடுங்கோ என்று அடை மொழியும் பெற்ற புலவராயினர்.

இவர் பாடியுள்ளனவாகப் புறநானூற்றில் ஒன்றும், குறுந்தொகையில் பத்துச் செய்யுட் களும், நற்றிணையில் பத்துப் பாடல்களும், அகநானூற்றில் பதினொன்றும், கலித்தொகை யில் முப்பத்தைந்தும் ஆக அறுபத்தேழு செய் யுட்கள் காணப்படுகின்றன. இவ்வாறு பாடல் கள் பல பாடியுள்ள நிலையினைக் கருதும் போது, இவர் பெரும் புலவர் என்பதனைக் கூறவும் வேண்டுமா? வேண்டா அன்றே? புறநானூற்றில் இவர் வீரன் ஒருவனைப் பற்றிப் பாடி அவ்வீரனது மேம்பாட்டினைப் புகழ்ந்து சிறப்பித்துள்ளார். அவ்வீரன் பகைவர்கள் முன்பு எதிர்த்து நின்று, பகைவர் எய்யும் படைகளைத் தன் உடம்பு முழுதும் ஏற்றும் பின் வாங்காது போர் இட்டானும். அதனால் அவன் உடம்பு தோன்றப் பெறாது படைக்

கலங்களால் மறையுண்டு கிடந்ததாம். இங்ஙனம் போரிட்டு வீர சுவர்க்கம் புகுந்த காரணத்தால்தான் அவன் புலவர்களால் பாடும் புகழ் பெற்று விளங்கினுன் என்பதை,

" சேண்விளங்கு நல்இசை நிறீஇ
நாநவில் புலவர் வாயு ளானே "

என்று பாடி முடித்துள்ளார்.

குறுந்தொகையில் இவர் பாடியுள்ள பாடல்-கருத்துக்கள் இனிமை தரவல்லனவாக உள்ளன. பெண்யானையின் பசியினைப் போக்க ஆண் யானை யா என்னும் மரத்தின் பட்டையினை உரித்து அதன் நீரைப் பருகச் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார். மற்ருேர் இடத்தில் ஆண் மக்களுக்குத் தொழில் புரிதல் உயிர் என்பதையும் பெண்டிர்க்குக் கணவன்மார் உயிர் என்பதையும்,

" வினையே ஆடவர்க்கு உயிரே ; வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் "

என்ற அடிகளில் காட்டியுள்ளார். இவர் பாடியுள்ள குறுந்தொகைப் பாடல் ஒன்ருல் இவர்க்குக் கொடையில் உள்ள மனப் பண்பு நன்கு தெரிகிறது. ஒரு தலைமகன் தலைமகளுக்குக் கூறும் வார்த்தையாகக் குறிப்பிடுகையில்,

" இரவலர் வாரா வைகல் பல ஆகுக "

என்று கூறுகிருர். இதனுல், இவ்வாருன நாட்கள் வருதல் ஆகாது என்பது குறிப்பு.

முன்னேர் தேடிய செல்வத்தைப் பின்னேர் செலவழிப்பின் அவர்கள் செல்வர் ஆகார்

என்றும், தாமாகச் சம்பாதித்த பொருளைக் கொண்டு வாழாதவர் இரந்துண்டு வாழ்வாரினும் இழிந்தவர் ஆவர் என்றும் தாம் கருதிய கருத்துக்களை,

" உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு"

என்ற அடிகளில் எத்துணை அழகுறக் கூறியுள்ளார் பாருங்கள்!

நற்றிணையில் இவர் கருத்தாக உள்ளனவற்றைக் காண்போமாக : ஒருவன் தன் மனத்துக்கு உகந்த மனைட்டியைப் பெற்றது தான் வழிபடும் தெய்வத்தைக் கண்ணெதிர் வரப் பெற்றது போலும் என்ற கருத்தினை,

" அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாங்கு"

என்னும் அடிகளில் கூறி நம்மைக் களிக்கச் செய்கின்றார் புலவர். அகநானூற்றில் காணப்படும் பாடல்களால் இப்புலவர் பெருமானின் அருங் கருத்துக்கள் பல புலனாகின்றன. செல்வத்தின் சிறப்பினைப் புலப்படுத்த வேண்டிப் "பாவத்தில் படாத வாழ்க்கையினைப் பெறுதற்கும், பிறர் வாயில்படி சென்று பிச்சை எடுத்து வாழாமல் வாழும் வாழ்க்கையினைப் பெறுதற்கும் செல்வமே காரணம்" என்பதை,

" அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும்"

என்னும் அடிகளில் கூறி விளக்கியுள்ளார்.

இப்பெரும் புலவர் பாலை பாடிய பெருங் கடுங்கோ என்பதற்கு மிக மிகப் பொருத்த முடையவர் என்பது, இவரால் பாடப்பட்ட கலித்தொகைச் செய்யுட்களில் பாலை நிலத்தின் கொடுமையினைத் தெரிவித்திருப்பதிலிருந்து நன்கு உணரலாம். பாலையில் நீர் இன்றி மக்கள் துன்புற்றுக் கண்ணீர் சிந்தினர் என்றும், அங்ஙனம் சிந்திய கண்ணீரையே தம் நெஞ்சினை நனைத்துக்கொள்ள உண்ணீராகக் கொண்டனர் என்றும் தம்மகத்துக் கொண்ட கருத்தினை,

"உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறுஅத் தடுமாற்று அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு"

என்ற அடிகளில் அமைத்துப் பாலையின் கடுமையினைக் குறிப்பிடுவாராயின், இதனினும் கடுமையாகப் பாலையின் கொடுமையினைக் கூற இயலுமோ? சிந்தித்துப் பாருங்கள்.

இன்னோரன்ன கருத்துக்கள் பல இப்புலவர் வாக்கில் நிறைந்திருப்பதனால், அவற்றை அவர் கவிகளில் கண்டு மேலும் இன்புறுவீர்களாக.

# 2. சேரமான் கணைக்கால் இரும்பொறை

மக்கட்கு அமைய வேண்டிய பண்புகளில் மானமும் ஒன்று. மானமாவது எக்காலத்தும் நிலையில் தாழாமையும், அங்ஙனம் வரவேண்டிய தாழ்வு ஊழ் காரணமாக வந்த போது, உயிர் வாழாமையும் ஆகும். இதனை **வள்ளுவர்** "மானம்" என்ற அதிகாரத்தில் அமைத்து மானத்தைக் கைவிடாதே என்ற கருத்தினை அழுத்தந் திருத்தமாகப் பேசியுள்ளார். அவர், "தம் குடிப் பிறப்புத் தாழ வரும் செயல்களை ஒழிக்கவேண்டும். யார் தமது மானத்தினின்று விலகி வாழ்வு நடத்துகின்றனரோ, அவர்கள் தலையினின்று கீழே மழித்து நீக்கப்பட்ட மயிருக்குச் சமானமானவர். குன்று போன்ற தோற்ற முடையவராயினும், குன்றி மணி போன்ற மானம் சிதைக்கும் செயல் புரிந்தால் அவர் குன்றிப் போவர். மானம் குறைந்தவர்க்குப் புகழ் ஏற்படாது. நல்ல மானியாக இருப்பவர் மானம் கெடும் நிலை ஏற்பட்டால், தன் ஒரு மயிர் இழக்க நேரும்போது உயிர் விடும் கவரிமான் போல் மானத்தைக் காக்க உயிரையே இழப்பர்" என்றெல்லாம் கூறிப் போந்தார்.

"உயிரை விட்டேனும் மானத்தைக் காப்பது தான் சிறப்பு" என்று **வில்லியார்** கூறுவர். "மானம் இழந்து உலகில் வாழும்

வாழ்க்கையின் வசை எழு பிறப்பும் நீங்காது'' என்பர் **கந்தபுராண** ஆசிரியர். "மானம் அழியாது உயிர் விடுகை சிறந்தது'' என்னும் **நல்வழி**. "மானம் அழிந்த பின் வாழாமை முன்னினிதே'' என்னும் **இனியவை நாற்பது**. "தம் மானம் போகும் வகையில் வானகமே வந்தாலும் சிறந்த மானிகள் அதனை விரும்பமாட்டார்'' என்னும் **நாலடியார்**. "மானம் அழிந்து வாழ்வதினும் மரணம் அடைவது உத்தமம்'' என்னும் சாதாரணப் பழமொழியும் உலகில் வழங்கி வருகிறது. இத் தகைய மானத்தின் பெருமையினை நிலை நாட் டித் தம் உயிரையும் விட்ட மன்னரே, **சேரமான் கணைக்கால் இரும்பொறை** யாவார். இவர் மன்னராலும் மதி மிக்க புலவராயும் இருந்த காரணத்தால் கவியும் பாடிய காவலர் ஆவார்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பார், இயற் பெயரை நாம் அறிதற்கு இல்லை. இவரது கால் திரண்டு வீரக்கழல் புனைதற்கு ஏற்ற பொலிவுடன் இருந்த காரணம் பற்றிக் **கணைக்கால்** என்று சிறப் பிக்கப்பட்டு, இவரது சேரர் குடிக்கே சிறப்புப் பெயராக அமைந்த **இரும்பொறை** என்பதை யும் இணைத்துக் கணைக்கால் இரும்பொறை என்று கூறப்பட்டார் போலும்! இவர் சேரர் மரபினர் என்பதைத் தெற்றத் தெளிய உணர்த் தச் **சேரன்** கணைக்கால் இரும்பொறை என்று அழைக்கப்பட்டனர்.

அரசர்கள் அமைதியாக வாழ இயலாது. அவர்கள் அடிக்கடி அமர் செய்ய நேரிடும். அந்த முறையில் **சோழன் செங்கணுனுக்கும்** சேரன் கணைக்கால் இரும் பொறையாகிய இவருக்கும் போர் மூண்டது. போரும் மிக்க வீரத்துடன் நடந்தது. இப் போரின் சிறப் பினைப் **பொய்கையார்** பாடிய **களவழி நாற்பது** என்னும் நூலால் நன்கு அறியலாம். போரின் முடிவு சோழன் செங்கணுன் வெற்றி மாலை புனையவும், சேரன் கணைக்கால் இரும் பொறை பையுள்மாலை (துன்பமாலை) சூடவும் நேர்ந்ததே. கணைக்கால் இரும்பொறை சோழ ஞல் பற்றப்பட்டுச் சிறை செய்யப்பட்டார். சேரர் சிறையில் இருந்தபோது, நீர் வேட்கை மிக்கமையின் சிறைக் கோட்டத்தினைக் காவல் புரியும் காவலரை நோக்கித் தமது வேட்கை தீர நீர் தருமாறு கேட்டனர். சிறைப்பட்ட வர்கள் மன்னரேயாளுலும், சிறைப்பட்டிருக் கும் காரணத்தால் சிறைக் காவலர் மன்னரது வேண்டுகோளை உடனே நிறைவேற்ருது அசட்டையாக இருந்து தாமதம் செய்து, பின்பு நீரைக் கொணர்ந்து நீட்டினர். அப் போதுதான் சேரமான் கணைக்கால் இரும் பொறைக்கு மானத்தின் மேன்மை கருத்தில் உதித்தது. இனி ஒருக் கணமும் உயிருடன் இருத்தல் கூடாது என்று முடிவு கட்டினுர். தமது அரசர் மரபின் 'மேம்பாடும், தாம் உற் றுள்ள சிறுமையும் குறித்துப் பாடி விட்டு

இறக்கத் துணிந்தார். "அரசர் குடியில் பிறந்தவர் தாம் போர் முகத்தைப் பாராது இறக்க நேரின், வீர சுவர்க்கம் புகுதற்கு இயலாது என்ற காரணத்தால் இறந்தவர் உடம்பைத் தருப்பையில் கிடத்தி வாளால் போழ்ந்து, 'போரில் இறந்தவர் அடையும் கதியினை இவர் அடைக' எனக் கடவுளை வேண்டி அடக்கம் செய்வர். இம் மரபில் பிறந்தவர் குழவிப் பருவத்தில் இறந்தாலும், அல்லது முழு வடிவு உருத மணை போல் ஊன் வடிவுடன் பிறந்தாலும், அவ் வுடல்களை மேற்கூறியவாறு வாளால் வெட்டிய பின்பே அடக்கம் செய்வர். அத்தகைய வீரர் மரபினர் மன்னனுன யான், சிறைக் காவலர் தம் இருப்புச் சங்கிலியால் பிணைத்து நாய்போல் இழுத்துச் சிறையில் அடைக்க இனியும் என் வயிற்றுத் தீத் தணிய நீரை உண்டு உயிர் வாழேன்" என்று பாடி உயிர் நீத்தார்.

இவரன்றோ மானமுடைய மன்னர்! அரசர்க்கு மானத்தின் மிக்க அறனும் இல்லை, பொருளும் இல்லை, இன்பமும் இல்லை என்பனவற்றை விளக்கியவீரர் அல்லவோ இவர்? சிறைக் காவலர் இவரைச் சங்கிலி கொண்டு பிணித்துச் சிறைப்படுத்திய நிலையினை உவமையாய்க் கூறிய, "தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய கேள்அல் கேளீர்" என்னும் அடியினைப் படிக்கும்போது அது நாம் இரக்கப் படத்தான் செய்கிறது.

# 3. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

பிரிவு என்பது பெருந் துன்பம் தர வல்லது. இதனைப் "பேயோடாயினும் பிரிவரிதே" என்னும் பழமொழியினாலும் நன்கு அறியலாம். இவ்வாறான பிரிவு இரண்டு முறையில் அமையும். ஒன்று சின்னாளோ, சில திங்களோ, சில்லாண்டோ பிரிந்து இருந்து மீண்டும் வந்து கூடுவதாகும். மற்றொன்று, வாழ் நாள் உலந்து வானடைறுகின்ற பெரும் பிரிவாகும். இது மீண்டும் வந்து கூடும் பிரிவாகாது. இந்தப் பிரிவுக்கு எவரும் அஞ்சுவர். இல்லையானால் "யானேதும் பிறப் பஞ்சேன் இறப்பதற்கு என் கடவேன்" என்று வாதவூரர் கூற முன் வருவாரா? ஆகவே, இறப்புப் பிரிவு மிக மிக இன்னாதது. ஆதலின், மனம் ஒத்த காதலன் காதலி ஆகிய இருவருள் ஒருவர் பிரிந்து போனால் அவர்கள் உள்ளம் என்ன பாடுபடும்?

திருவள்ளுவர் எவ்வளவோ உள்ளத்துரன் படைத்தவர்; எல்லோருக்கும் நீதி புகட்டியவர்; இறப்பின் இயற்கை நிகழ்ச்சியைக் கூட எடுத்து இயம்பியவர்; "நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" என்றும் "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும்

பிறப்பு'' என்றும் கூறியவர். இத்தகைய வரும் தம் வாழ்க்கைத் துணைவியார் வாசுகி அம்மையார் இறந்தபோது, அவ்வம்மையாரது பிரிவாற்றுமைக்காக,

'' அடிசிற்கு இனியாளே ! அன்புடை யாளே !
படிசொல் தவருத பாவாய்!—அடிவருடிப்
பின் தூங்கி முன் எழுந்த பேதையே ! போதியோ ?
என் தூங்கும் என்கண் இரா.''

என்று பாடித் தம் துன்ப நிலையைத் தோற்று வித்தாராயின், இறப்பின் பிரிவைப் பற்றி என்ன கூற இயலும் ! ஒரு சிலர் மேலே குறிப் பிட்ட நிகழ்ச்சி வள்ளுவர் வாழ்க்கையில் கண்ட உண்மைக் குறிப்பன்று ; இது தனிப் பாடல் நூலின் பாடற்கியையக் கட்டிவிட்ட கர்ணபரம்பரைச் செய்தி என்று கூற முன் வரலாம். கர்ணபரம்பரைச் செய்தியே என்று லும், இதில் ஓர் உண்மை வெளியாகிறது அல்லவா ? அதாவது பேர் அறிஞர் ஆயினும், தம் உடனுறை மக்கள் மண்ணுல கிடைப் பிரிந்து விண்ணுலகு புகுந்தால் வருந்தாது இரார் என்பதன்றே ? அதிலும், தம் வாழ்க் கைக்கே துணையாக உள்ள இல்லக்கிழத்தியார் இறந்தால் மிகுதியும் ஏக்கம் கொள்வர் என்பது அறிய வருகின்றதன்றே ? எனவே, ஈண்டுச் சேரர் குலமன்னராம் **சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை** என்பார் தம் மனையாளாம் **கோப்பெண்டு** இறந்தபோது

பாடிய பாடல் ஒன்றன் பொருளையும் காண்போமாக :

மாக் கோதை என்பவர் சேர மன்னர் குடியினர். இஃது இவரது பெயர் தொடக்கத்தில் **சேரமான்** கோட்டம்பலத்துத் துஞ்சியமாக் கோதை என்பதில் அமைந்துள்ள முதற் சொல்லால் நமக்குப் புலனாகிறது. சேரர் பலராதலின் அவர்களுள் ஒவ்வொருவரையும் வேறுபடுத்திக் காட்டுதற்குச் சில குறிப்புக்களையும் அவர்கள் பெயருடன் சார்த்திப் பேசப்படுவது தொன்று தொட்ட மரபு. அம் முறையில் மாக் கோதை என்னும் சேரர் குடியினர் **கோட்டம் பலம்** என்றும் இடத்தில் தம் பூத உடல் விடுத்துப் புகழ் உடல் பெற்ற காரணத்தால், அதாவது இறந்ததனால் சேரமான் **கோட்டம்பலத் துத் துஞ்சிய** மாக் கோதை என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்பாரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பினை அறிதற்கு இல்லை. இவர் இல்லறத்தை இனிது நடத்தத் தம் மனத்துக்குகந்த மனையாளோடு தம் வாழ்வு நடத்தியவர் ஆவர். இவரும் இவரது இல்லாளும் மனம் ஒத்துத் தம் இல்லறத்தை நடத்தி இருக்கின்றனர். கனவிலும் நனவிலும் பிரியாது மனம் கலந்து வாழ்ந்திருக்கின்றனர். இங்ஙனம் வாழ்வு நடத்தியதால்தான், தம் பெருங்கோப்பெண்டு இறந்தபோது, அவ்வம்மையைப் பிரிந்திருக்க

ஆற்ருத காரணத்தால்தான் இவ்வரசப் புலவர் கையறு நிலையாகிய அருங் கவியைப் பாடி இருக்கிருர். இவ்வொரு பாடலாலே இவ ரும் கவி பாடவல்ல காவலர் இனத்தில் சேரக் கூடியவராயினர். இவரது பாடல் புறநானூற் றில் காணப்படுகிறது.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக் கோதை தம் மனையாளைப் பிரிந்திருக்க இயலாது, அவ்வம்மையோடு தாமும் உயிர் விடுதற்கு இல்லையே என்னும் கருத்தினை "இன்னும் வாழ்வல்? என் இதன் பண்பே?" என்று குறிப்பிடுவராயின், இவர் தம் மனைவி யார் மாட்டு வைத்திருந்த அன்பு வெளியாகிற தல்லவா? பூம்பள்ளியில் படுத்துத் துயில வேண்டியவள்; இதுபோது இறந்து அழல் பள்ளியில் படுத்து விண்ணுடு செல்கின்றனளே என்று வருந்திக் கூறிய அடிகளாகிய

> "ஒள் அழல் பள்ளிப் பாயல் சேர்த்தி
> ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை"

என்பன எவருடைய நெஞ்சத்தைத்தான் உருகாதிருக்கச் செய்யும்? இவரும் பிரிவு காரணமாக மனையாளோடு உடன்கட்டை ஏறி இருப்பர். அவ்வாறு உடன்கட்டை ஏறு தல் மாதர்கட்குரிய செயலாக இருந்தமையின், இவர் உடன்கட்டை ஏறி உயிர்விடாது இருந் தனர் போலும்!

# 4. சோழன் நல்லுருத்திரன்

உருத்திரன் என்பது சிவபெருமானுக் குரிய திருப் பெயர்களில் ஒன்று. அப் பெயர் இவ்வரசர்க்குச் சூட்டி வழங்கப்பட்டது. குண விசேடம் இம் மன்னர் பால் அமைந்திருந்த காரணத்தால் **நல்** உருத்திரன் என்று தம் பெயர்க்கு முன் சார்த்திக் கூறப்பட்டு வந் துள்ளார். இவர் சோழ மன்னர் மரபினர் என்பதை, இவர் திருப் பெயர் முன்னர் சோழன் என்ற குடிப்பெயர் அமைந்து குறித் துக் கொண்டிருப்பதனுல் நன்கு உணரலாம்.

இவ்வரச மகனுர் சோழன் நல்லுத்தரன் எனவும், குடிப் பெயர் குறிக்கப்படாமல் நல்லுத்திரன் எனவும் வழங்கப்பட்டுள்ளார். இவர்பால் உலக மக்கள் சோம்பி இருத்தல் குறித்து அவர்களை வெறுக்கும் இயல்பு அமைந் திருந்தது. ஊக்கமுடைய மக்களை உவந்து வந்தனர். சோம்பலுடைய மக்களை வெறுத்து ஒதுக்கி வந்தனர். இந்தவாருன பண்பு இவர் பால் இருந்திருக்குமாலுல், இவர் ஊக்கம்உடை யவராய் இருந்திருப்பார் என்பதைக் கூறவும் வேண்டுமோ ? இவர் ஊக்கமுடையவர் பால் விருப்பும், அஃது இல்லவர்பால் வெறுப்பும் கொண்டவர் என்பதை இவர் பாடியுள்ள புற நானூற்றுச் செய்யுள் நமக்கு 'நன்கு புலப் படுத்துகின்றது. அப் பாடலால் இவர் எத்

தகைய நண்பரோடும் நட்புக் கொண்டிருக்க விரும்பாதவர் என்பதையும், முயற்சியுடைய நண்பரோடு உறவாடவே உறுதி கொண்டிருந் தார் என்பதையும் அறியலாம். இக் கருத்துக் களை "உளம் முயற்சி இலாளரோடு இயைந்த கேண்மை (நட்பு) இல்லாகியரோ" என்ற அடியினுலும், "உள்ளத்து உரன் (வன்மை) உடையாளர் கேண்மையொடு இயைந்தவைகல் (நாட்கள்) உளவாகியரோ" என்ற அடியி னுலும் நன்கு உணரலாம். மேலும் இவரது பாடலால் எலி நெற் கதிர்களைக் கொண்டு தன் வளையில் சேமித்து வைத்து உண்ணும் செயல் அழகுபடக் கூறியிருப்பதையும் அறியலாம். மற்றும் ஒரு செய்தியும் இவரது புறநானூற் றுச் செய்யுள் புகலுகிறது. அது புலியின் வீர மேம்பாட்டுச் செய்தியாகும். புலியானது தன்னல் கொல்லப்பட்ட பன்றி, தனது இடப் பக்கத்தே வீழுமாளுல், அது தனது வீரத் திற்கு இழுக்கினை உணர்த்தும் செயல் என்று தான் எத்துணைப் பசித்து இருந்தாலும், தான் கொன்றதேனும் அவ்வராகத்தை உண்ணு தாம். அன்று தனக்கு யாதோர் உணவும் கிடைக்காதிருப்பினும், பசித்தே இருந்து அடுத்த நாள் ஆண் யானை ஒன்றைக் கருதி வெளியே சென்று, தன் எதிரே பட்ட அக் களிற்றினைக்கொன்றுத் தனக்கு வலத்தே விழு மாறு செய்து அதன்பின் அவ் வேழத்தின் தசையினைத் தின்னுமாம்.

சோழன் நல்லுருத்திரனார் இப் புற நானூற்றுச் செய்யுள் ஒன்றே அன்றிக் கற்றோர் ஏத்தும் கலித் தொகையில் முல்லைக் கலியாகப் பதினேழு செய்யுட்களையும் பாடி யுள்ளார்.

"கற்றோர் ஏத்தும் கலி" என்ற குறிப்பி னால் கலித் தொகைக் கவிகள் சுவைத்தற்கு உரியன என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. அத்தகைய கலிக் கவிகளில் சோழன் நல்லு ருத்திரனார் அமைத்த சுவைகள் சிலவற்றை நாமும் சுவைப்போமாக.

ஆயன் ஒருவன் தன் கைக்கோலைத் தன் தாடையில் வைத்து நிலத்தில் ஊன்றிப் பிடித் துக் கொண்டு நின்ற கோலத்தைச் "சுவல் மிசைக் கோல் அசைத்த கையன்" என்ற அடியில் கூறியிருப்பதைப் படிக்கும் போது ஆயன் தோற்றம் நம் கண்முன் காணப் பெறு வதைக் காண்க. முல்லை நிலமாதலின் ஆன் இனங்கட்கு அளவு கூறமுடியாது அல்லவா? அத்தகைய பெருவாரியான ஆன் நிரைகளுள் சில கருமை நிறத்துடன் விளங்கிக் கால்கள் மட்டும் வெண்ணிறமுடையனவாய் இருந்தன என்பதையும், சில தம் உடலகத்துப் பல புள்ளிகளைப் பெற்றுப் பொலிந்து இருந்தன என்பதையும் கூறுதற்கு எண்ணிய இப்புலவர் உடற் கருமையும் வெண்ணிறக்காலுமுடைய ஏற்றிற்கு மலையில் இருந்து ஓடிவரும் வெள் ளருவியின் ஒழுக்கினையும், புள்ளியுடைய ஏற்

றிற்கு விண்ணில் படர்ந்த நட்சத்திரங்களையும் முறையாக உவமை காட்டினர்.

> " மணிவரை மருங்கில் அருவி போல
> அணிவரம்பு அறுத்த வெண்கால் காரி "
> " மீன் பூத்து அவிர் வரும் அந்திவான் விசும்பு போல
> வான்பொறி பரந்த புள்ளி வெள்ளை "

என்பன இவரது வாக்குகள்.

ஆயர்கள் இடையே கொல்லேறு தழுவும் வீர மகனுக்கே தன் மகளைக் கடிமணம் முடிக்கும் வழக்கம் இருந்து வந்தது. இவ்வழக்கத்திற்கு இளங் கன்னியரும் இடம் கொடுத்தனர். தாமும் கோல்லேறு தழுவாத வீரமுடைய ஆயர்களை இப் பிறப்பிலேயே மட்டும் அன்றி, மறு பிறப்பிலும்கூட மணக்க விருப்பம் கொள்ளாராம். என்னே அம் மடமாதர் மன உரம்!

> " கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
> புல்லாளே ஆய மகள் "

என்ற பெருமித வாக்கைக் காண்க.

ஆயர்குடி தொன்றுதொட்ட பாண்டியர் குடியுடன் தோன்றிய பெருமையுடையது என்று சோழர் மரபினரான நல்லுருத்திரனுர் கூறிய கூற்று கூர்ந்து கவனித்தற்கு உரியது. "வாடாச் சீர் தென்னவன் தொல் இசை நட்ட குடியொடு தோன்றிய நல் இனத்து ஆயர் " என்பர் இப்புலவர் ஏறு. " எஞ்ஞான்றும் நெய் கடை பாலின் பயன் யாதும் இன்று " என்றும்

இவர் பாலின் பயனைப் பண்படக் கூறி யுள்ளார்.

இவரது கவிகளில் பல குறிப்புக்கள் நாம் அறிதற்கு இருந்தாலும், அவற்றை எல்லாம் முழுநூலில் காணுமாறு விடுத்து, இறுதியாக ஒன்றை மட்டும் கூறி இப்புலவரது வரலாற்றை முடிப்போமாக.

ஆயர்கள் கொண்ட நன்னெறிகள் பல. அவற்றுள் ஒன்று தாம் எவ்வளவு பொருளைப் பெற்றாலும் இருமணம் கூடுதல் இல்லை என்பதாகும். ஏன், உலகமே பெறினும் இருமணம் கூடார் என்க. இதனை எத்துணை அழுத்தம் திருத்தமாக இவ்வரசக்கவிஞர் அறிவிக்கின்றார் பாருங்கள் !

" விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே "

என்ற வீறுடை அடிகளைக் காண்க

# 5. சோழன் நலங்கிள்ளி

கிள்ளி என்னும் மொழி சோழர் குடிக்கே சிறப்புப் பெயராகத் திகழவல்லது. அச் சொல்லையே தமக்குரிய பெயராக இவ்வேந்தர் பெற்றிருப்பாராயின், சோழருள் இவரும் ஒரு சிறப்புப் பெற்றவர் என்பதும் அறிய வருகிறது. மேலும், இவர் சோழர்குடிச் சீரியர் ஆதலின், பெயருக்கு முன் அக்குடிக்குரிய பொதுச் சொல்லையும் சேர்த்துச் சோழர் நலங் கிள்ளி என்று கூறப்பட்டு வந்தார். குடிப் பண்புடன் நலப் பண்பும் கூடி இருந்தமையின் சோழன் நலங் கிள்ளி என்றும் அழைக்கப் பட்டு வந்தனர்.

இம் மன்னர் சோழன் நலங் கிள்ளி என்ற பெயரால் மட்டும் குறிப்பிடப் பெருமல், சேட் சென்னி, புட்பகை, சேர் வண் கிள்ளி, என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளார். இங்ஙனம் தனித் தனிப் பெயரால் சுட்டப் பெருமல் சேட் சென்னி நலங் கிள்ளி என்றும் குறிப் பிடப்பட்டு வந்துள்ளார்.

இவர் புலவர்களால் சிறப்பித்துப் பாடப் பட்ட புகழ்பெற்றவர். இவரை, உறையூர் முது கண்ணன் சாத்தனுர், கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார், ஆகிய முப்பெரும் புலவர்கள் பாடிச் சிறப்பித்துள்ளார். இம் மூவரது பாடல்களால் சோழன் நலங் கிள்ளி

யின் வாழ்க்கைக் குறிப்புக்கள் பல தெரிய வருகின்றன.

சோழன் நலங்கிள்ளி போர் செய்து வெற்றி கொள்ளுதலையே பொருளாகக் கொண்ட மனப் பண்புடையவர் என்றாலும், உறையூர் முதுக் கண்ணனார் இவரது வீரத்தின் வேகத்தைக்கண்டு, "இப்படி இம்மைக்குரிய இன்பத்திற்கு ஆவன செய்யின், அம்மைக்குரிய ஆன்ம லாபத்திற்கு ஆவனவற்றை எப்போது இவர் செய்வது?" என்பதை அறிந்து, "அறம் பல செய்க" என்னும் நல்லுரையினைக்கூற, அதன்படியே இவர் நடந்து கொண்டவர். இதனால் இவர் புலவர் வாய் மொழிப்படி நடப்பவர் என்பது தெரிகிறதல்லவா ?

இவரது போர்ச்சிறப்பு மிகுதியாகக் கோவூர் கிழாரால் பாராட்டப்பட்டுப் பாடப் பட்டுள்ளது. இவரது வெண் கொற்றக்குடை சேரர் பாண்டியர் குடைகள் பின்னிட முன்னின்ற சிறப்புடையது. இங்ஙனம் முன் நின்ற சிறப்பானது பொருளும் இன்பமும் முன்னுள்ள அறத்தின் பின்னே தோன்றும் காட்சி போன்றது எனப் புலவர் உவமை யாலும் விளக்கினர். இவர் நாட்டின்கண் இருப்பதினும், புகழையும் போர் வென்றி யையும் விரும்பிப் பாடி வீட்டிலேயே வீற் றிருக்க விரும்புவர். இவரது மனப்பண்புக்கு ஏற்ப, இவரது யானைகளும், பகைவரது

மதிலைக் குத்துவதினின்றும் அடங்கமாட்டா. இவரது போர் வீரரும் போர் என்றதும் மகிழ்ச்சியில் பொங்குபவர் ஆவர். இவ்வாறான படைப் பலம் பெற்ற மன்னர் இவர் ஆயின், வடபுலத்து மன்னர் வாட்ட முறுதற்குக் கேட்கவா வேண்டும்? அவர்கள் தம் உள்ளத்தில் துன்பம் மிக்கு உறங்காத கண்ணுடையவராயினர்.

இவர் பாண்டிய நாட்டில் உள்ள ஏழ் அரண்களை வென்றவர். வென்றதற்கு அறிகுறியாகத் தம் புலிப் பொறியினைப் பொறித்தவர். ஏழ் அரண்களைக் கோவூர் கிழார் ஏழ் **எயிற் கதவம்** என்று குறிப்பிட்டுள்ளார். ஏழ் எயில் கதவமாவது ஏழு மதிலின் கண் உள்ள கதவுகள் என்பதாம். பாண்டிய நாட்டில் ஏழு பொன் கோட்டை என்ற ஓர் ஊர் உளதாகவும், அது சிவகங்கையைச் சார்ந்ததாகவும், அதுவே இவ்வேழ் எயில் இருந்த இடமாக இருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

இவர் வீரமும் ஈரமும் ஒருங்கே அமையப் பெற்றவர். மென்மை மகளிர்க்கு வணங்குபவர்; வன்மையான வீரரைப் பற்றும் பேர்வலி படைத்தவர். பாணர்களையோ, பரிசில் மாக்களையோ இவர் காண நேரில், அவர்கட்கு அவர்கள் வேட்கை தீர அளிப்பவர். அவர்கள் இவர்பால் பெற்ற பொருள் மிகுதியினால் பிறர்பால் சென்று கேட்கவும் விரும்பார் என்றால், இவரது அள்ளி ஈயும் அளவைக் கூறவும்

வேண்டுமோ? "பிறன் கடை மறப்ப நல்குவன் செலினே" என்பர் கோவூர் கிழார். தாம் வென்ற நாட்டையும் கூடப் பிறர்க்கு ஈவராம். "பரிசில் மாக்களே! சோழன் நலங் கிள்ளியைப் பாடுவோம் வருக. அவன் பூவா வஞ்சியையும் (கருவூரையும்) விறலியர் சூடும் பூவிற்கு விலையாக மாட மதுரையையும் தரு கிறவன்" என்று இவரது கொடைத்திறத் தைப் புகழ்ந்துள்ளார் கோவூர்கிழார். அவரே இவரைநோக்கி, "வலிமையும் முயற்சியும் உடைய வேந்தே! பிறரிடம் சென்று பாடிப் பெறுதல் வேண்டா" என்று கூறுவத ஞல் இவருக்குப் பிறரிடம் செல்லா வகையில் பொருள் ஈவார் இம்மன்னர் என்பது புலப்படுகிறது. சோழன் நலங் கிள்ளி தம் பகையினைப் போக்கிக் கொள்ளுதலோடு பிறர் பசியைப் போக்கவே முன் வருவர் என்பதைக் கோவூர்கிழார் "தன் பகைகடிதல் அன்றியும் சேர்ந்தோர் பசிப்பகை கடிதலும் வல்லன் மாதோ" என்று கூறியதிலிருந்து தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெற்றியும் புலனுகிறது. என்ருலும், "படுகளத்தில் ஒப் பாரி ஏது?" என்பதனுல் தம் தாயத்தாரோடு பகைத்து அவர்களது ஆவூரையும் உறை யூரையும் முற்றுகை செய்தவர். இதற்குச் சான்று இவர் நெடுங்கிள்ளியுடன் பகைமை கொண்டதால் அறிந்து கொள்ளலாம்.

இன்னேரன்ன பீடும் பேரும் உடைய மன்

னர் கவிபாடும் காவலராயும் இருப்பராயின், இவரது புகழைப் புகலவும் வேண்டுமோ? இவரால் பாடப்பட்ட செய்யுட்கள் இரண்டு. அவை புறநானூற்றில் காணப்படுவன. இவரது பாட்டினின்று இவரது ஈரநெஞ்சமும் வீர உள்ளமும் வீறிட்டுத் தோன்றுகின்றன. இவர்பால் இவ்விரு பண்புகளும் உண்டு என்பதை முன்னரும் கண்டனம். ஆனால், அவை புறச்சான்றால் புலனாகிய செய்திகள். இங்கு அகச்சான்றாக இவர் பாடிய செய்யுட்களின் மூலமாகவும் இப்பண்புகள் இவர்க்கு இயற்கையில் அமைந்த குணங்கள் என்பதை உணரலாம். இவரது வீறு கொண்ட மாற்றத்தினைப் பாருங்கள்: "மெல்ல வந்து எனது நல் அடியை அடைந்து, 'எமக்கு ஈய வேண்டும்,' என்று தாழ்ந்து கேட்பராயின், எனது அரசைக் கொடுப்பேன். அது மட்டும் அன்று. இனிய எனது உயிரையும் கொடுப்பேன். ஆனால், தம் வலிகாரணமாக எம் வலியினை அறியாது, என் உள்ளத்தை இகழ்ந்து என்னோடு போரிட வருவராயின், அந்தோ! அவர்கள் பிழைத்துப் போதல் அரிது" என்கிறார். அவர்கள் பிழைத்தல் அரிது என்பதை ஓர் உவமை வாயிலாக இவர் உணர்த்தி இருப்பதுதான் இவரது நுண்ணறிவுத் திறனை நன்கு விளக்க வல்லதாகும். அமைதியாக உறங்கும் புலியை ஒரு கண்ணிலி இடறுவானாயின், அவன் பிழைக்க வழியுண்டாகுமோ? தப்பி ஓடுதற்குத் தனி வழிகாணக்

கண்ணும் இல்லையே! அதுபோலத் தம்மை அண்டிப் போரிடத் துணிந்தவர் தப்புதல் அரிது என்கிருர். "துஞ்சுபுலி இடறிய சிதடன் போல உய்ந்தனன் பெயர்தலோ அரிதே" என்பன அவ்வுவமையைக்காட்டும் அடிகள். மேலும், இவர் பொதுப் பெண்டிரை விரும்பா இயல்பினர் என்பதும் இவரது பாடல் அறிவிக்கும் கருத்தாகும். இவர் இக் கருத்தினை தமது சபத மொழியாகவும் கூறுகிருர்.

மற்ருெரு பாடலால் நாம் அறிவனவற்றை யும் காண்போமாக. "அரச உரிமையை ஆண்மை அற்ற சிறியோன் பெறின், அது சிறந்தது அன்று. அது அவனுக்குப் பெரும் பாரமாக இருக்கும். மன எழுச்சியும் வலிய முயற்சியும் உடைய சிறியோன் பெற்ருல், அது அவனுக்குப் பாரமாக இராமல் இலேசாக இருக்கும்" என்று கூறும் கருத்தே சீரிய கருத்து. இக்கருத்தே இவரது இரண்டாம் பாடலில் தொனிப்பதாகும்.

# 6. இரும்பிடர்த் தலையார்

சோழர் குடியின் தோன்றல்களில் ஒருவன் **கரிகாற்சோழன்.** இவன் கரிகால் பெருவளத் தான், சோழன் கரிகால் பெருவளத்தான் என்றும் கூறப்படுபவன். இவன் சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன். நாங்கூர் வேள் மகளை மணந் தவன். இவனுக்குக் கரிகாலன் என்னும் பெயர் வந்தமைக்கு இரு பெருங் காரணங்கள் கூறப்படும். ஒன்று இவன் இளமையில் நெருப்பினுல் சுடப்பட்டு உயிர் பிழைத்த போது, இவனது கால் சிறிது கரிந்த காரணத் தால் கரிகாலன் எனப்பட்டான் என்றும், **கழு மலம்** என்னும் ஊரில் இருந்து யானையை ஏவ, அது சென்று இவனுக்கு மாலை சூட்டிக் கொணர்ந்து அரசராக்கியதால் **கரிகாவலன்** என்பது கரிகாலன் என ஆயிற்று என்றும் கூறப்படும்.

இவன் சிறந்த போர்வீரன். சேரமான் பெருஞ் சேரலாதனேடு வெண்ணி யென்னும் ஊர்ப்புறத்தே போர்க்களத்தில் போரிட்டு வென்றவன். அதே களத்தில் பாண்டியன் ஒருவனையும் வெற்றி கொண்டவன். இமயம் வரை படை எடுத்துச் சென்று அம்மலைக்கும் தன் ஊருக்கும் இடைப்பட்ட இடங்களில் இருந்த வடநாட்டு மன்னர்களையும் வென்று வாகை சூடியவன். காவிரிப்பூம்பட்டினத்தைத்

தன் அரசிருக்கையாகக் கொண்டவன். உறையூரைத் தனது அரசின் தலைநகராகக் கொண்டவன். அதன் காரணமாக அந்நகரை நன்கு செழிப்புற வளமாகச் செய்தவன். நல்ல முறையில் அரசு புரிந்து நீதி வழங்கியவன். இதற்குச் சான்ருக ஒரு நிகழ்ச்சியினை எடுத்துக் காட்டிஞல் இதன் உண்மை நன்கு தெரியவரும்.

ஒரு முறை இரு பெரும் முதியோர் தம்முள் மாறுபட்டு அதனைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, இவனை நாடினர். இவன் இளைஞுய்க் காணப்பட்டமையின், இவன் அவ்வளவு அனுபவம் பெற்றிரான் என்று உணர்ந்து தம் வழக்கைக் கூருது திரும்பிச் சென்றனர். இதனை அறிந்த கரிகால் சோழன் அம்முதியோர்களை அடுத்த நாள் வருமாறு கூறி, அப்போது நன்கு வயது முதிர்ந்த பெரியோரைக் கொண்டு, அவர்களின் வழக்கினைத் தீர்த்து வைப்பதாகச் சொல்லி அனுப்பிஞன். அவர்களும் இவனது பேச்சில் நம்பிக்கை வைத்து, அடுத்த நாள் வருவதாகச் சென்று விட்டனர். கரிகாற் சோழன் அடுத்த நாள் தானே கிழவன் போல வேடம் பூண்டு, முதியவர்களின் வருகையை நோக்கி இருந்தான். முதியவர்களும் வந்தனர். தம்முன் நரைத்த முடியுடன் காணப்பட்ட உருவத்தைக் கண்டனர். "ஆ! இவரே நம் வழக்கைத் தீர்த்து வைக்கத் தக்க பெரிய

வர்'' என்று அறிந்து அவரிடம் தம் வழக்கைக் கூறினர். நரை முடித்த தோற்றத்தோடு விளங்கிய கரிகாலன் இருவர் வழக்கையும் நன்கு ஆராய்ந்து குற்றம் உள்ளவர் இவர் தாம் என்பதை இருவருள் ஒருவரைச் சுட்டிக் காட்டினன். தீர்ப்பு ஒழுங்கானது என்பதை வந்த இரு பெரு முதுவர்களும் ஒப்புக் கொண்டனர். அதன் பின் கரிகாலன் தன் முதுமைக் கோலமாகிய வேடத்தை நீக்கி இளைய கரிகாலனைத் தோற்றம் அளித்தனன். "ஆ! இவன் நம் வழக்கைத் தீர்க்க வலியற்றவன் என்றல்லவா எண்ணினோம்! இப்போது அவனே அன்றோ நல்ல அனுபவம் முதிர்ந்தவன் போல் வழக்கைத் தீர்த்தனன்!'' என்று கூறிப் பாராட்டிச் சென்றனர்.

இத்தகைய பேரும் புகழும் சீரும் சிறப்பும் உடைய மன்னனது அம்மானே **இரும்பிடர்த்தலையார்** ஆவார். கரிகால் பெருவளத்தானது அம்மான் முறையினர் இப்புலவர் என்றால், அவர் அரசமரபினர் என்பது உறுதியல்லவா? இவர் இச்சோழ மன்னனுக்கும் பெருந்துணையாய் இருந்தனர். இவன் சுடப்பட்டபோது, அச் சுடுதலினின்று பிழைக்குமாறு செய்தவர் இவரே ஆவர். இவர் பெற்றோரால் எப்பெயரால் அழைக்கப்பட்டனர் என்பது தெரியவில்லை. ஆனால், இவர் யானையின் பிடரை **இரும்பிடர்த்தலை** என்று சிறப்பித்த காரணத்தால் **இரும்பிடர்த்தலையார்** என்று

குறிப்பிடப்பட்டு வந்தார். அருந்தொடர்களைக் கூறியதனுல் பெயர் பெற்ற புலவர்கள் பலர் நம் தமிழ் நூல்களில் காணப்படுகின்றனர். ஒருவர் மூங்கில் மரத்தின் முனை, நீர் நிலையில் படிந்திருப்பது மீனைப் பிடிக்க எறியப்பட்ட தூண்டில் போல இருந்தது என்று உவமித்த காரணத்தால், **மீனெறிதூண்டிலார்** எனப் பட்டார். இரும்பிடர்த்தலையார் புலமை மிக்கவர் என்பது இவரால் பாடப்பட்ட பாடல் புற நானூறு என்னும் தொகை நூலில் இடம் பெற்று இருப்பதால் நன்கு அறியலாம். இவரால் பாடப்பெற்ற பெருமை பெற்றவன் **பாண்டியன் கருங்கை யொள்வாள் பெரும்பெயர் வழுதி** என்பவன். இப் பாண்டியன் வீரமும் கொடையும் பெற்றிருந்த காரணத்தால் இப் புலவர் பெருமான் இவனைப் பாடினர் போலும்! புலவர் சோழர் மரபினர் ஆயினும், பாண்டியன் ஒருவனைப் புகழ்ந்து பாடியது இவரது பரந்த நோக்கத்தைப் புலப்படுத்துகிறது.

புலவர் இப்பாண்டியனை விளிக்கையில், இப்பாண்டியர் குலம் ஈகையில் முன்னணியில் நின்ற இயல்புடையது என்பதைத் "தவரு ஈகைக் கவுரியர் மருக!" என்று கூறியதிலிருந்து அறியலாம். 'மருக' என்பது மரபில் வந்தோனே என்பதைக் குறிக்கும் மொழியாகும். இவ்வாறு அவனை விளித்துப் "பூமியே பிறழ்ந்தாலும் நீ சொன்ன சொல்லைத் தவருது நடப்பாயாக" என்பதை, "நிலம் பெய

ரினும் நின் சொல்பெயரல்'' என்று அவனுக்கு நல்லுரை நவின்றுள்ளார். இத்துடன் அவனுக்கு அறிவுறுத்தல் இன்றி, "மன்ன! உன்னைக் காண இரவலர் வருவர். அவர்களின் குறிப்பு அறிந்து நீ ஈந்து அவர்களின் வறுமையைப் போக்குவாய் என்ற காரணமே அவர்கள் இடரான வழிகள் பல கடந்து வருதற்குக் காரணம்'' என்பதை

"நின்நசை வேட்கையின் இரவலர் வருவர்அது
முன்னம் முகத்தின் உணர்ந்து அவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே''

என்று கூறி அவனது கொடைச் சிறப்பைப் புகழ்ந்துள்ளார்.

இப்பாண்டியன் பகைவர் இடையில் கூற்றுவனைப் போல் இருந்து அவர்கள் உயிரைக் கொல்பவன் என்ற குறிப்பில் இவன் யானைமீது அமர்ந்த தோற்றத்தனாய்த் தன் கையில் வீரவாளுடன் துலங்குவான் என்பதை

"மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக்
கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி''

என்று கூறி இவனது வீரச் சிறப்பையும் விளக்கியுள்ளார்.

# 7. கோப்பெருஞ் சோழன்

கோப்பெருஞ் சோழர் முடியுடை மூவேந்தர் குடியாகிய சோழர் குடியினர். இவர் அக்குடியில் பெருமை மிக்கவராகவும் தலைசிறந்தவராகவும் விளங்கிய காரணத்தால் கோப்பெருஞ் சோழர் என்று கூறப்பட்டார் போலும்! சோழர்கட்குரிய தலைநகரங்கள் ஐந்து. அவற்றுள் ஒன்று உறையூர். அதனைத் தம் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்தனர். இவருக்கு உயிரனைய நண்பர்கள் இரு பெரும் புலவர்கள். அவர்கள் பிசிராந்தையார், பொத்தியார் என்பவர்கள். இந்த உண்மையினை திருக்குறள் உரையாசிரியராகிய பரிமேலழகர்

" புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்."

என்னும், நட்பின் மாண்பை உணர்த்தும் குறட்பாவிற்கு உரை எழுதியபின், விசேடப் பொருள் உரைக்கும்போது "கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின் அதுவே உடன் உயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும்" என்று எடுத்து மொழிந்து கோப்பெருஞ் சோழனுக்கும், சிராந்தையார்க்கும் இருந்த நட்பின் மாண்பினை நன்கு விளக்கிப் போந்தனர். ஒல்காப் பெருமைத் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியப் பொருளதி

காரக் கற்பியல் ஐம்பத்திரண்டாம் சூத்திர உரையிலும், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், " இதற்குக் கோப்பெருஞ் சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தார் " என்று கூறி இருப்பதனாலும் அறியலாம். பிசிராந்தையாரும், இவ்வரசருக்கும் பொத்தியாருக்கும், இருந்த நட்பினை, " பொந்தில் நட்பில் பொத்தியொடு கெழீஇ " என்று கூறினர். பிசிராந்தையார்க்கும் இம்மன்னருக்கும் இருந்த நட்பின் மேம்பாட்டினை அகச் சான்றினாலும் அறியலாம். பிசிராந்தையார் அன்னச் சேவலைப் பார்த்து, " அன்னமே! நீ வடதிசை செல்வையாயின், இடையே சோழ நாட்டினை அடைந்து, எம் நண்பர் கோப்பெருஞ் சோழரைக் கண்டு, ' யான் பாண்டிய நாட்டுப் பிசிராந்தையார் அடியின் கீழ் வாழ்வது ' என்று கூறிய உடன் நீ இன்புறும் பெண் அன்னம் பூணத்தக்க அணிகலங்களை அளிப்பன் " என்று கூறியதனாலும் இப்புலவர் பெருமான் தாம் பாண்டிய நாட்டினராக இருந்தும் தமது இறைவன் கோப்பெருஞ் சோழன் என்றும் செப்பியதனாலும் அறியலாம்.

கோப்பெருஞ் சோழர் **பிசிராந்தையார் புல்லாற்றூர் எயிற்றியனார், பொத்தியார், கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார்** ஆகிய புலவர்களால் சிறப்பித்துப் பாடப்

பட்ட மன்னர் ஆவார். இப்புலவர் பெரு மக்கள் பாடிய பாடல்களால் இவ்வரசர் பெரு மகனரது வாழ்க்கைக் குறிப்புக்கள் பல வெளி யாகின்றன. "பிள்ளைதான் வயதில் மூத்தால் பிதாவின் சொற் புத்தி கேளான்" என்பது நம் நாட்டு முதுமொழி யாதலின், கோப் பெருஞ் சோழருக்கும் அவரது பிள்ளைகளுக் கும் மனம் ஒன்றுபடாத காரணத்தால் போரும் மூண்டது. அது பிற நாட்டுப் பகை மன்னர்களால் தொடுக்கப்பட்ட போராக இன்றிக் குடும்பத்திற்குள்ளேயே எழுந்த போராக அமைந்தமையால், இது கண்டு புல வர்கள் சும்மா இருந்திலர். இதனை மூண்டு எழ ஒட்டாமல் தடுக்கமுயன்றனர். புல்லாற்றூர் எயிற்றியனூர் இதில் முனைந்து நின்றார். புல வர் புல்லாற்றூர் எயிற்றியனூர் கோப்பெருஞ் சோழனை அணுகி, "புகழால் விளங்கும் வெற்றி வாய்ந்த வேந்தே! உன்னோடு எதிர்த் துப் போரிடுபவர் உன் பகை வேந்தர்களாகிய சேரரும் அல்லர்; பாண்டியரும் அல்லர். உன் எதிரே போர்க்கோலம் பூண்டு போர் புரி பவர்க்கு நீ பகைவனும் அல்லன். நீ நிலவுல கில் வாழ்வாங்கு வாழ்ந்து விண்ணுலகிற்கு விருந்தாகச் சென்றபின், உன் அரசு இது போது உன்னோடு எதிர்த்து நிற்கும் இம் மக்களுக்கே சேர்தற்குரியது. உன்னோடு எதிர்த்துப் போர் புரியும் உன் மக்கள் சூழ்ச்சி இல்லாத அறிவுடையவர்கள். இவர்கள் உன்

ளோடு சண்டை செய்து தோற்பின் உன் அரசையும் செல்வத்தையும் வேறு எவர்க் கேனும் கொடுத்து விடுவாயோ? அவற்றை இவர்களுக்கே அன்ருே கொடுப்பாய்? நீ தோற்ருல் உன் பகைவர் உன்னை எள்ளி நகைப்பர் அல்லவா? உனக்குப் பழியும் உண்டாகும் அல்லவா? ஆகவே, நீ கொண் டுள்ள கோபந் தணிக" என்று கூறி இம் மன்னர் கோபம் தணியுமாறு செய்தார். இதனுல், இவருக்கும் இவர் பிள்ளைகட்கும் பகைமை இருந்ததை அறிகிருேம் அல்லவா? புலவர் மொழிகள் அரசர் கோபத்தைத் தணித்தன.

இவ்வரசப் பெருமகனுர் பின்பு எல்லாவற் றையும் துறந்து வடக்கிருந்து உயிர் துறக்கத் தீர்மானித்தார். இவர் வடக்கிருந்தபோது இவர் தம் உடல் தசையை வாட்டி வடக்கிருத் தலைக் கண்டு "முழூஉம் வள்ளூரம் (தசை) உணக்கும் மள்ள" என்று கனிந்து கூறினர் கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதனுர். வடக் கிருத்தலாவது மேலுலகத்தை அடைய விரும் பினேர் இவ்வுலகில் அனுபவிக்கும் இன்பத் தைத் துறந்து, விரதத்தாலும் உடலை மெலியச் செய்து யோகப் பயிற்சியால் உயிரை விடுத்தற்குத் தாம் வாழ்ந்த இடத்தைவிட்டு நீங்கி வடதிசை ஆற்றிடைக் குறையில் மழை நாள், வெயில் நாள், பனி நாள் என்றும் பாராமல் தங்குதலாம். மீளாமல் நியமத்

துடன் வடதிசையில் செல்லுதலும் உண்டு. இங்ஙனம் செல்லுதலை **உத்தர கமனம்** என்றும் **மகாப் பிரத்தானம்** என்றும் கூறுவர்.

கோப்பெருஞ் சோழர் துறக்கம்புக வடக்கிருந்தார். அதுபோது இவரது உயிரனைய நண்பர் பிசிராந்தையார் அங்கு வந்தனர். அது கண்ட பொத்தியார், சோழர் எல்லாவற்றையும் துறந்து வடக்கிருக்கச் சென்ற துணிவினையும், இவர் வடக்கிருத்தலை அறிந்து நட்பே பற்றுக் கோடாகப் பிசிராந்தையார் அங்கு வந்ததையும், பிசிராந்தையார் எப்படியும் இங்கு வருவர் என்று உறுதியோடு சோழர் கூறிய கூற்றையும் வியந்து பாராட்டினர். "இத்தகைய அரசரை இழந்த நாடு இரங்கத்தக்கது." என்றும் கூறினர்.

பொத்தியார் கோப்பெருஞ் சோழரை விட்டுப் பிரிந்திருக்கும் நிலையினைக் குறித்து ஓர் உவமை வாயிலாகக் கூறியிருப்பது நயமாக உள்ளது. அவர் உணவு தந்து காத்து வந்த யானையை இழந்த பாகன் உற்ற துன்பத்தை உவமை காட்டினர்.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தே உயிர் துறந்தார். அங்கு நடுகல் நடப்பட்டது. அந்நடுகல்லைக் கண்ட பொத்தியார் இச்சோழர் பண்பாடுகளை எண்ணி எண்ணி, "எம்மரசர் பாடுநர்க்குக் கொடுத்த பல புகழ் உடையவர்; கூத்தர்க்குக் கொடுத்த அன்

புடையவர் ; நீதி வழுவாச் செங்கோலர் ; திண்ணிய நட்புப் பண்பு உடையவர் ; அந்தணர்க்குப் புகலிடமாய் இருப்பவர்" என்று கனிந்து கூறினர்.

பொத்தியாருக்குக் கோப்பெருஞ் சோழரை விட்டுப் பிரிந்து வாழ மனம் இல்லை. ஆகவே, தாமும் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தார். அதுபோது அவரது இல்லக் கிழத்தியார் கருவுற்றிருந்தார். அஃது அரசர்க்குத் தெரியும். ஆதலின், குழந்தை பிறந்த பின் தம்மைத் தொடர்ந்து வருமாறு கூறி இருந்தார். அவ்வாறே தம் நண்பர் மொழியினை மாறாது பிள்ளை பிறக்கும்வரை இல்லத்தில் இருந்தார். பிள்ளையும் பிறந்தது. பின்பு கோப்பெருஞ்சோழர் நடுகல் கண்டு, " நீ கூறியபடி பிள்ளை பெறும் அளவு இருந்தேன். இனியும் நின்னைப் பிரிந்து ஆற்றியிரேன். எனக்கும் நின் நடு கல்லில் இடந்தருக." என்று கேட்டனர். நடு கல்லும் இடம் தந்தது. அதுபோது பொத்தியார், "பழமையான நட்புடையவர்கள், கல்லானாலும் இடம் கொடுப்பர்" என்று வியந்து கூறினார். என்னே இவர்கள் நட்பின் மாண்பு !

இங்ஙனம் புலவர்களால் பாராட்டப்பட்ட பெருமன்னராம் கோப்பெருஞ் சோழர் பாடிய பாடல்கள் ஏழு. அவை குறுந்தொகையில் நான்கு, புறநானூற்றில் மூன்றும் ஆகும். குறுந்தொகைச் செய்யுட்கள் காதலர்களின்

உளப் பண்புகளை உணர்த்துவன. அவற்றைப் பின்னால் நீங்களே படித்து இன்புறுக.

இனிப் புறநானூற்றில் காணப்படும் செய்யுட்களின் பண்பைச் சிறிது காண்போமாக.

முன்பே கோப்பெருஞ் சோழர்க்கும் புலவர்கள் பிசிராந்தையார், பொத்தியார் ஆகிய இவ்விருவர்க்கும் உளம் ஒத்த நட்பு இருந்தது என்பதைக் கண்டோம். அதனைப் புலவர் வாயிலாக உணர்ந்த நாம் கோப்பெருஞ் சோழர் வாயிலாகவும் அறியவேண்டும் அல்லவா? கோப்பெருஞ் சோழர் வடக்கிருந்தார். அப்போது சோழர் தம்மோடு இருந்தவர்களை நோக்கி, "எம் உயிரினைப் பாதுகாப்பவர் பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரில் வாழ்பவராகிய ஆந்தையார் என்பவர். அவர் யான் வடக்கிருத்தலை அறிந்து ஈண்டு எப்படியும் வந்தே தீருவர். அவர் செல்வம் உள்ள காலத்தில் வருதற்குத் தடைப்பட்டாலும், துன்புற்ற காலத்தில் வருதற்குச் சிறிதும் தடைப்படார்." என்று கூறியருளினர். இதனை

"செல்வக் காலை நிற்பினும்
அல்லல் காலை நில்லலன் மன்னே"

என்ற இம்மன்னரது வாக்கால் அறியலாம்.

மேலும், கோப்பெருஞ்சோழர் தம் நண்பரைப்பற்றிக் குறிப்பிடும்போது "என் நண்பர் வருவரோ? வாராரோ?" என்று ஐயம் கொள்ளாதீர். அவர் என்னிடம் என்றும் இகழ்ச்சி

யில்லாதவர் ; இனிய குணமுடையவர் ; பிணிப் புண்ட நட்புடையவர் ; பொய்யை என்றும் புறக்கணிப்பவர் ; தம் பெயரைக் கூருமல் என் பெயரையே பிறர்க்குக் கூறுபவர். ஆகவே, அவர் வராமல் இரார். அவருக்கும் என்னோடு வடக்கிருக்க இடம் ஒழித்துத் தருக" என்று அறிவுறுத்தியுள்ளார். பிசிராந்தையாரைப் பற்றிக் கோப்பெருஞ்சோழர் கூறிய தொடர் களையும் ஈண்டு நினைவு கூர்க. "இகழ்விலன் ; இனிய யாத்த நண்பினன் ; புகழ்கெடவரூஉ பொய் வேண்டலன் ; சிறந்த காதல் கிழமை யும் உடையோன்" என்பன அத்தொடர்கள். இங்ஙனம் பாடும் புலவராயும், புலவர்களால் பாடப்பட்ட புரவலராயும் கோப்பெருஞ்சோழர் துலங்கினர்.

# 8. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

“வளவனாயினும் அளவு அறிந்து உண்” என்பது தமிழ் நாட்டுப் பழமொழிகளுள் ஒன்று. இதன் பொருள் பெருஞ்செல்வத்தைப் பெற்ற சோழனாலும் வீணிலே ஒன்றையும் பாழாக்காமல், உண்ணுதல் வேண்டும் என்பதாம். இதனால் சோழர்கள் பொருள் வளம் படைத்தவர்கள் என்பதும் தெரிகிறது அல்லவா? அத்தகைய சோழர் குடிப் பொதுச் சொல்லாகிய வளவன் என்பதைத் தம் சிறப்புப் பெயருடன் இணைத்துப் பேசப்படும் பெருமை சான்றவர் கிள்ளிவளவன் என்பவர். இவர் அரசராக இருந்ததோடு அல்லாமல், அருங் கவிகளைப் புனையும் அறிஞராகவும் இருந்திருக்கிறார்.

இம் மன்னர்பிரான் உறையூரைத் தமது தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டவர். இவர் கொடையும் வீரமும் உடையவர். இவர் கருவூரை முற்றுகை இட்டுச் சேரனை வென்றவர். இவரது வரலாற்றுக் குறிப்புக்கள் இவரைப் புகழ்ந்து ஆலத்தூர் கிழார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங் கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், கோவூர் கிழார், நல் இறையனார், எருக்காட்டுத்தாயம் கண்ணனார், வெள்

ஊக்குடி நாகனூர் ஆகிய புலவர் பெரு மக்கள் பாடிய பாடல்களில் இருந்தும் அறியலாம். இங்ஙனம் அறியப்பட்ட குறிப்புக்கள் யாவை என இனிக் காண்போமாக.

ஆலத்தூர்க்கிழார் இக் கிள்ளிவளவனைப் பற்றி அறிந்து கூறியவை பின்வருவன: அவையே, " இம் மன்னர் பாணர்க்கு நீங்காத செல்வம் ஈந்தவர். பெருமை பொருந்திய வன்மையான தாள் உடையவர். (அரசர்கட்குக் காவல் மரம் மிக்க உரிமையுடையது; பெருமை தருவது.) அதனை வெட்டி வீழ்த்த முன்வருபவர். அது வெட்டப்படும்போது, அதனைக் கண்டு அம்மரத்திற்கு உரிய மன்னன் வாளா இராமல் அதனை வெட்டும் பகைவனோடு வீறிட்டு எழுந்து போரிடத் தொடங்குகையில் தாமும் போரில் எழுச்சி கொண்டு அதில் வெற்றிகொள்ளும்பொருட்டு வேலைத் தாங்கி அப்பகைவர் உள்ள இடத்திற்குப் போதல் உரியவர். தம் வாயிலில் எவரேனும் இரவலர் வருவராயின், அவர்கள் நீட்டித்து இவரது வாயிலில் நின்று காலம் பார்த்துக் கேட்பன கேட்கவேண்டும் என்பது இன்றி, உடனே அவர்கட்குப் பொற்றாமரைப் பூவைச் சூட்டி அனுப்புவார். பரிசிலர்க்குத் தேரும் வழங்கும் இயல்பினர் " என்பன.

மாறேக்கத்து நப்பசலையார் கிள்ளிவளவனைப்பற்றிக் கூறுகையில், இவ்வரசருக்குப் போரின்கண் உள்ள விருப்பினால் பகைவரது

அரணைத் தகர்க்க வலிய ஆற்றலுடையவர் என்று கூறுகிருர். இவரால் அழிக்கப்படும் அரண்கள் முதலைகள் உலாவுவதும் குழிந்த இடத்தையுடைய அகழியையும் செம்பு போன்று திண்மை மிக்க மதிலையும் உடையவை. இவ்வரண்களை யுடையனவாயினும் அவை நல்லன என்று கூடப் பாராமல் அழிக்கும் ஆற்றல் உடையவர். இம் மன்னரது ஈகைப் பண்பு இயற்கையில் அமைந்த பண்பு. அதற்குக் காரணம் இவரது முன்ஞேர் புறவுக்காகத் தம் தசையினையும் ஈந்தவர் என்பதை இப்புலவர் இம்மன்னரைக் குறிப்பிடுகையில் பெரும்பாலும் குறிப்பிட்டே செல்கின்றனர். அங்ஙனம் கொடுக்கும் மரபில் இவர் தோன்றியுள்ளமையால் இவர் கொடைக்குணம் இயற்கையாதலின், அஃது இவர்க்குப் புகழ் ஆகாது என்றும், இவரது முன்ஞேர் ஆகாயத்தில் இருந்த தூங்கெயில் என்னும் கோட்டையினை அழித்த கொற்றமுடையவர் ஆதலின், இவர் பகைவர்களை வெல்லுதலும் இவர்பால் அமைந்த இயற்கை வன்மையினைக் காட்டுமே அன்றிப் புகழாகாது என்றும், உறந்தையம் பதியில் அறமும், நீதியும் எப்போதும் நிலைபெற்று இருத்தலின், இவரது அரசமுறைமை புகழ் உடையது என்று கூறுதற்கும் இல்லை என்றும், இம் மன்னர் சேரனது கருவூரை முற்றுகை இட்டபோது வஞ்சப் புகழ்ச்சியாக இம்மன்னரது ஈகைவன்மை, செங்கோன்மை

முதலியவற்றை வலக்காரம் தோன்றப் பாடியுள்ளார்.

ஆவூர் மூலங்கிழார் இவரைப்பற்றி யாது கூறியுள்ளார் என்பதையும் காண்போமாக :

கிள்ளிவளவன் நல்ல படை பலம் உடையவர். இவர் கோபங்கொண்டு பார்க்கும் இடங்கள் தீ பரவும் இடங்களாக ஆகிவிடும். அதாவது வெற்றி கொள்ளும்பொருட்டுச் சுட்டு எரிக்கப்பட்டுப் போகும் என்பதாம். இவரே நயந்து நோக்கும் இடங்கள் யாவும் பொன்னும் பொருளும் பொலியும் இடங்களாகும். அதாவது இவரது அருட்பார்வை பெற்றவர் நல்ல பரிசிலைப்பெறுவர் என்பதாம். மேலும் இவர் தமது ஆற்றல் காரணமாகச் சூரியனிடத்தில் தண்மையைப் பெற விரும்பினாலும், சந்திரனிடத்தில் வெம்மையைப் பெற விரும்பினாலும் வேண்டியது விளைவிக்கும் ஆற்றல் உடையவர். பரிசில் மாக்கள் தேவ நாட்டை அடைந்து அங்குவாழவும் எண்ணம் கொள்ளாராம். இதற்குக் காரணம் அங்குச் செல்வம் உடையவர் ஈதலும், அஃது இல்லாதார் ஏற்றலும் இன்றி ஒரே நிலை இருத்தலே என்க. இதனைப் புலவர், "உடையோர் ஈதலும் இல்லார் இரத்தலும் கடவது அன்மையின் கையறவுடைத்து" என்பர். இம் மன்னரது நாட்டில் உடையவர் ஏற்பவருக்கு ஈதலைச் செய்யும் பண்பு நிலைத்து இருப்பதால், இவரது நாட்டின்கண் வாழவே இரவலர்

உளங் கொள்வர். இதனுல் மன்னரது கொடைப் பண்பும், மக்களது ஈகைப் பண்பும் அறியவருகின்றன அல்லவா? "மன்னன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்பது நம் நாட்டுப் பழமொழிதானே! இவரது வீரத்தின் மேம்பாட்டை ஆவூர் மூலங்கிழார் வெகு சமத்காரமாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது "பகைவரது மகுடங்களாகச் செய்யப்பட்ட பொன்னே இவர் தமது பாதங்கட்கு வீரக்கழலாகச் செய்து புனைந்துகொள்வார். இவரை யார் இழித்து உரைக்கின்றனரோ, அவர்கள் கழுத்து இறைஞ்சுமாறு செய்ய வல்லவர். புகழ்ந்துரைப்போர் பொலிவுற விளங்கச் செய்வார்."

கோவூர் கிழார் இக் கோமகனுரைப் பற்றிக் கூறியிருப்பனவற்றை இனிக் காண்போமாக:

கிள்ளி வளவன் போரில் கொடுமை மிக்கவரே. இயமனுகிலும் உயிர்களைக் கொள்ள விரும்பினுல், அவ்வுயிரின் கால அளவு உலந்தபோது கொண்டு செல்வன். ஆனுல், கிள்ளி வளவனே எனில், காலமே பாராது பகைவரை வேண்டியபோது கொல்லும் தொழிலர். "வேண்டிடத்து அடூஉம் வெல் போர் வேந்தே" என்று இக்காரணம் பற்றியே கூறப்பட்டது. மேலே கூறிய கொடுமையை மேலும் விளக்க வேண்டினுல், கிள்ளி வளவனது நிகழ்ச்சி ஒன்ருல் கோவூர் கிழார்

குறிப்பிட்டதிலிருந்து அறிந்து கொள்ளலாம். கிள்ளிவளவனுக்கு மலையமான் திருமுடிக்காரி பகைவன்தான். அதன் காரணமாக அவனது மக்களையும் கொல்லக் கருதி அக் குழந்தைகளை யானைக் காலில் வைத்து மிதித்துக் கொல்லுமாறு செய்திருந்தார். அந்தோ! கள்ளம் கபடு அற்ற குழந்தைகள் கொல்லப்படுதலைப் புலவர் கோவூர் கிழார் அறிந்து சகித்திலர். ஆகவே, உடனே கிள்ளிவளவனை நோக்கி, "புறவுக்காகத் தன்தசையை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்ரவர்த்தியின் மரபில் தோன்றினவனே" என்று விளித்து, "இம்மக்கள் புலவரது வறுமை கண்டு சகியாது அவர்கள் வறுமைதீர உதவும் வள்ளல் மரபில் தோன்றியவர்கள். இக் குழந்தைகள் தாம் யானை முன்பு தம்மைக் கொல்லுதற்கு இடப்பட்டுள்ளோம் என்பதை அறியாது, அழுகையையும் மறந்து யானையைக் கண்டு களிக்கின்றன. இந் நிலையில் நீ விரும்பியதைச் செய்க" என்றதும் கிள்ளிவளவன் குழந்தைகளைக் கொல்லாது விடுத்தனர். இதனால் இவர் புலவர் அறவுரைக்குப்பெரிதும் செவி சாய்ப்பவர் என்பது தெரிகிறது. அல்லவா? இவரது வன்மையையும் கோவூர் கிழார் அழகுபடச் சித்திரித்துள்ளார். இவரது உறந்தையம்பதி "அடுதீ அல்லது சுடுதீ அறியா"தாம். அதாவது உணவு சமைக்க எரிக்கப்படும் தீயே அன்றிப் பகைவரால் கொளுத்தப்படும் நெருப்பை அறியா

தாம். இவரது நாடு இரு மருந்தினை விளக்கும் நாடு என்கிறார் புலவர். இரு மருந்தாவன, சோறும் நீரும். ஆ என்னே! இம் மன்னர் புலவர்க்கு அளிக்கும் வண்மையின் மாண்பு! புலவர்கள் வெய்து உண்டதனால் அடையும் வியர்வையே அன்றி வேலை செய்வதனால் அடையும் வியர்வை கொள்ளாது இருக்க, இவர் பொருள்களைக் கொடுத்து உதவுவாராம். இதனை

> " வெய்து உண்ட வியர்வு அல்லது
> செய்தொழிலால் வியர்ப்பு அறியாமை ஈத்தோன் "

என்ற அடிகளில் காண்க.

இம் மன்னரது ஆதரவில் வாழும் புலவர்கட்கு எதைப்பற்றியும் கவலை இராது. இதற்குக் காரணம் புலவரது கருத்து அறிந்து வேண்டியது உணர்ந்து ஈய வல்லர் என்பதே. இப்புலவர் இதனை எத்துணைக் குதூகலத்துடன் பாடிக் காட்டுகிறார் பாருங்கள்!

> " குணதிசை நின்று குடமுதல் செலினும்
> குடதிசை நின்று குணமுதல் செலினும்
> வடதிசை நின்று தென்வயின் செலினும்
> தென்திசை நின்று குறுகாது நீடினும்
> யாண்டு நிற்க வெள்ளி, யாம்
> வேண்டியது உணர்ந்தோன் "

என்பன புலவர் வாக்கில் எழுந்த மொழிகள்.

நல்லிறையனார் மிகுந்த வறுமையால்

வாடிய புலவர். இவர் உண்ணுது பல நாள் வாழ்வு நடத்தியவர் என்பது, இவர் கிள்ளிவள வனைக் குறிப்பிடும்போது தம் போன்ற வறுமையுடைய மக்கள் உண்ணுதற்கு உணவு பெருமையால் கையைக் கழுவுதற்கும் காலம் வாய்க்காமல், அக்கை ஈரமே அறியாத நிலே யில் இருந்தது என்பதை அழகுபட 'ஈர்ங்கை மறந்த என் இரும்பேர் ஒக்கல்' என்ற அடி யினில் சித்திரித்துள்ளார். இதனுல், கிள்ளி வளவர் வறுமையாளர் துன்பம் தீரப் பொருள் ஈபவர் என்பது தெரியவருகிறது.

கிள்ளிவளவரது சார்பில் இருந்த புலவர் கள் சிறிதும் வாட்டம் இன்றி வாழ்ந்தனர் என்பது எருக்காட்டூர்த் தாயங்கண்ணனர் பாடலாலும் தெரிகிறது. அவர் குதூகலத் துடன், "நாங்கள் கடலானது ஊழிக் காலத் தில் பொங்குவது போன்று பொங்கினும், சூரி யன் கிழக்கே தோன்ருது தெற்கே தோன்றி ணுலும் அஞ்சமாட்டோம். நாங்கள் கிள்ளி வளவன் தாள் நிழலில் இருப்பவர்" என்பன வற்றை

"எரிதிரைப் பொருங்கடல் இறுதிக்கண் செலினும்
தெறுகதிர்க் கனலி தென்திசைத் தோன்றினும்
என் என்று அஞ்சலம் யாமே"

என்று குறிப்பிட்டுள்ளார். இவர் குறிப்பிடும் அளவுக்கு இம் மன்னரும் சூட்டிறைச்சியும், தேறலும், மெல்லிய ஆடையும், பொன்

னும் பொருளு நல்கியுள்ளார். இப் புலவர் பெற்ற ஆடை, "பாம்பு உரித்தன்ன வாள் பூங்கலிங்கம்" அதாவது அத்துணை மென்மை யான ஆடை என்பது பொருள்.

வெள்ளைக்குடி நாகனார் புலவராயினும் குடிப்பிறப்பில் வேளாண் இனத்தவர். இவரால் விளைவுக் குறைவு காரணமாக நிலத்துக்கும் கொடுக்க வேண்டிய வரியினைச் செலுத்த இயலவில்லை. ஆகவே, தம் குறையினைக் கிள்ளிவளவனிடத்தில் கூறிக் கொண்டு தாம் வரியினைச் செலுத்த இயலாமையை அறிவிக் கத்தொடங்கினர். அதுபோது, "மன்னா! அரசு எனப்படுவது நினதே. நாடு எனப்படுவதும் நினதேயாகும். எம் மன்னர், குடிமக்களின் குறைகளைக் கேட்கச் செவிசாய்க்கின்றனரோ, அவர்கள் தம் நாட்டில் வேண்டியபோது மழை யைப் பெறுவர். நீ பெற்றுள்ள வெண் கொற் றக்குடை, வெயில் மறைப்பதற்கு மட்டும் அமைந்தது அன்று. குடிகளையும் தன்கீழ் அழைத்துத் தண்ணிழல் செய்வதற்குமாகும். படை வீரரது வெற்றிக்குக் காரணம் உழவர் உழுது நெல் விளைவிப்பதனாலே என்பதையும் உணர்க. மழை பெய்யாது போயினும், விளைவு குறைந்துபோயினும், மக்கள் அரச னைத்தான் குறை கூறுவர். ஆகவே, நீ உழவர் குடியினை ஓம்புவாயாக, அப்படி ஓம்பினால் உன் பகைவர் உன்னடி வணங்குவர்" என்று அறிவுரை பகர்ந்தனர். உழவர் சிறப்பினைக்

கூறக் கேட்ட மன்னர் புலவர் இறுக்க வேண்டிய வரியினைத் தள்ளிக் கொடுத்தனர். இவ்வாறெல்லாம் புலவர்கள் கூறும் மொழிகளைக் கேட்டு நடப்பவர் கிள்ளிவளவர். இத்தகைய மன்னர் ஈரமும் வீரமும் கொண்டவராக இருந்தும் தாமும் கவிபாடும் வன்மையும் பெற்றிருந்தார்.

கிள்ளிவளவரது பாடல் புறநானூற்றில் காணப்படுவதாகும். அது தம் நாட்டில் ஈகையில் சிறந்து விளங்கிய சிறுகுடி கிழான் பண்ணன் என்பானைப் பற்றிய பாடல். பண்ணன் ஒரு குடியானவன். அவனது இல்லத்தில் எப்போதும் இளஞ்சிறுர் கூடி இருக்கப் பெற்றுச் சோற்றுத் திரளைக் கையகத்துக் கொண்டு சென்று கொண்டிருப்பதைக் காணலாம். இளஞ் சிறுவர் சோற்றுத் திரளைப் பெற்றுச் செல்லும் தோற்றம் எறும்புகள் முட்டைகளைக் கொண்டு வரிசை வரிசையாகச் செல்வது போல் காணப்படுமாம். வெண் சோற்றுக்கு முட்டையும் இளஞ்சிருர் ஒழுக்கிற்கு எறும்பின் வரிசையும் நல்ல உவமைகள். இக் காட்சியினைக் கிள்ளிவளவர், "முட்டை கொண்டு வன்புலம் சேரும் சிறு நுண் எறும்பின் ஒழுக்கு ஏய்ப்பச் சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும் இருங்கிளைச்சிருஅர்" என்று குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் இப்பண்ணன் இளஞ்சிருர் பசியினுல் வாடாதிருக்கும் வண்ணம் அன்னம் அளித்து வந்த காரணத்தால்

அவனை இவ்வரசப் புலவர் **பசிப்பிணி மருத்துவன்** என்று பட்டம் ஈந்து அகம் மகிழ்கின்றார். அதாவது, பண்ணன் பசி என்னும் நோயைத் தீர்க்கவல்ல வைத்தியனாம். பண்ணனது இல்லம் இளஞ்சிறார்களால் நிரம்பப் பெறுவதால் இரைச்சல் மிக்கு இருந்தது. என்பதை ஓர் உவமை வாயிலாகக் கூறும்போது, நன்கு பழுத்த பழங்களைக் கொண்ட ஆலமரத்தில் பறவைகள் கூடி ஓசை செய்வது போல் இருந்தது என்று குறிப்பிடுகிறார். இன்னோரன்ன கொடைப் பண்புடைய பண்ணன் பன்னாள் வாழ வேண்டும் என்பது கிள்ளிவளவரது உள்ளக்கிடக்கை. அதனால், தமது வாழ்நாட்களும் பண்ணனுக்கும் சேர்ந்து பன்னாள் பண்ணன் வாழ வேண்டும் என்று கிள்ளிவளவன் கருதினார். "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்பது கிள்ளிவளவனார் உளமார வாழ்த்திக் களிக்கும் அடி. என்னே இவர் கொடையாளர்பால் கொண்டுள்ள அன்பு! இத்தகைய சீரிய பண்புடைய கிள்ளிவளவர் தம் வாழ்நாள் உலந்ததனால் மண்ணுலகிலிருந்து விண்ணுலகு புக்கார். அதுபோது புலவர்கள் வருந்திக் கூறிய பாடல்கள் நம் உள்ளத்தை உருக்க வல்லனவாகும்.

"இயமன் சாதாரணமாக உயிர்களைக் கொண்டு செல்லும் முறையில் கிள்ளிவளவனைக் கொண்டு சென்றிருக்க இயலாது. அதற்குக் காரணம் கிள்ளிவளவன்பால்

அமைந்த வீரமாகும். அவ்வீரனை அணுக அஞ்சிய கூற்றுவன், தான் ஓர் இரவலன் போல் இருந்து கிள்ளிவளவனை அணுகி உயிரை இரந்து இருக்கவேண்டும். கிள்ளிவளவன் இல்லையென்னுது ஈயும் கடப்பாடு உடையவர். ஆதலின், தம் உயிரை ஈந்திருக்க வேண்டும். இதுவே, கிள்ளிவளவர் உயிர் உடலை விட்டுப் பிரிந்தமைக்குக் காரணம்.'' என்று கற்பனை மலியக் கனிந்து பாடியுள்ளார் மாறேக்கத்து நப்பசலையார். ஆடுதுறை மாசாத்தனுர், கிள்ளிவளவனைக் கொண்டு சென்ற இயமனை இழித்துப் பேசுகிருர். ''கூற்றுவ! உனக்கு அறிவில்லை; உன் நெஞ்சில் அன்பும் இல்லை. இதற்குக் காரணம் கூறுகிறேன் கேள்; எவரேனும் உணவு இல்லை·என்ற காரணத்தால் விதை நெல்லைச் சமைத்துச் சாப்பிடுவார்களா? அந் நெல் இருந்தால்தானே மேலே விளைவித்து உண்டு வாழ இயலும்? அது போலக் கிள்ளிவளவன் உயிருடன் இருந்தால் தானே, அவன் பகைவரை வென்று வென்று உனது பசியினைப் போக்குவன். இப்போது உன் பசியினைப் போக்குபவனைக் கொன்று விட்டனையே. இனி உன் பசியினைத் தணிப்பவர் யார்?'' என்று வினவுகிருர். இப்புலவர் இயமனை நோக்கிக் கூறிய சுடு சொற்கள்

> ''நனி பேதையே நயனில் கூற்றம்!
> விரகின்மையின் வித்தட்டு உண்டனை''

என்பன.

இவ்வாறு புலவர்களால் இரக்கத்துடன் பாடப்பட்ட சோழர் கிள்ளிவளவர் குள முற்றம் என்னும் ஊரின்கண் விண்ணுடு புக்கனர். இதனால் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 'எனப்பட்டார். 'துஞ்சிய' என்னும் மொழி இறந்த என்னும் பொருளில் ஈண்டு ஆளப்பட்டுள்ளது.

# 9. அண்டர் மகன் குறுவழுதி

தெய்வத்திரு மறையாம் திருக்குறளில் பொருட் பாலைச் சார்ந்த ஒழிபியல் என்னும் பகுதியின்கீழ், குடிமை என்னும் அதிகாரம் காணப்படுகின்றது. அவ்வதிகாரத்தின் ஐந் தாவது குறளாகிய,

"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று"

என்ற இதற்கு உரைவகுத்த பரிமேல் அழகர், "தொன்று தொட்டு வருகிற குடியில் பிறந்த வர் கொடுக்கும் பொருள் முன்னைய நிலையி னும் சுருங்கிய போதும், தம் நற்குணத்தி னின்றும் நீங்கார்' என்று உரை கூறித் தொன்று தொட்டு வருதலாவது சேர சோழ பாண்டியர் என்பது போல ஆதிகாலம் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று விளங் கச் செய்துள்ளார். இதனால், தொன்று தொட்ட பழங்குடி முடிவுடை மூவேந்தர் குடிகளாகிய சேர சோழ பாண்டியர் குடிகள் என்பது நன்கு தெரிய வருகிறது. பாண்டியர்கள் பல சொற் களால் குறிக்கப்படுவர். மாறர், கௌரியர், செழியர், வழுதியர் என்பன அக்குடியினரைக் குறிப்பிடும் சொற்களாகும்.

இத்தகைய பாண்டியர் குலத்தைச் சார்ந்த ஒரு பாண்டியன் தன் விருப்பம் காரணமாகத் தன் அரச குலமாகிய மன்னர் குலத்தில் பெண் கொள்ளாது, ஆயர் குலத்தில் அதாவது இடை

யர் குலத்தில் பெண் கொண்டனன். அவ் விடையர்குல மாதுடன் இன்புற்று இல்லறம் நடத்தும் காலத்து, அம்மாது கருவுற்று ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தனள். அம் மகன் ஆயர் குல மரபும், பாண்டியர் குல மரபும் ஆகிய இரு மரபுகளும் கலந்த நிலையில் பிறந் தவன் ஆதலின், அவனுக்கு வேறு எத்தகைய பெயரையும் சூட்டி அழைக்காமல், இரு மரபின் பெயர்களும் அமைந்த நிலையில் **அண்டர் மகன்** குறுவழுதி என்றே அழைக்கப்பட்டு வந்தான். அண்டர் என்பார் இடையர். வழுதி என்பது பாண்டியன் என்னும் பொருள் தரும் சொல். ஆகவே, இரு மரபுகளின் பெயர்களை இணைத்தே அண்டர் மகன் குறுவழுதி என்று கூறப்பட்டனன். அம் மகன் வளர்ச்சி அடைய வேண்டிய அளவு வளர்ச்சி பெறுமல், குறுகி இருந்தமையால் குறுவழுதி என்று அழைக்கப் பட்டனன் போலும்!

இவ்வண்டர் மகன் குறுவழுதி இளமை முதற்கொண்டே கல்வியில் ஆர்வம் கொண்டு தீந்தமிழ் மொழியில் காணும் இலக்கண இலக் கியங்களை நன்கு ஓதிப் பயின்று வந்தனன். இப் பயிற்சியே பின்னுல் பெரும் புலவர்களில் ஒருவனுய் இருக்கும் வாய்ப்பினைத் தந்தது. ஆகவே, இனி இவனைப்பற்றிக் கூறப்படும் போது மரியாதையாகவே கூறுதல் வேண்டும். இதற்குச் சான்ருக இவன் பின்னுல் **குருவழுதி யார்** என்று மரியாதையாகக் குறிக்கப்பட்டு

வந்ததையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ள லாம்.

அண்டர் மகன் குறுவழுதி பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ள செய்யுட்கள் நான்கு. அவற்றுள் ஒன்று புறநானூற்றிலும், மற்றொன்று குறுந்தொகையிலும், ஏனைய இரண்டும் அகநானூற்றிலும் உள்ளன.

புறநானூற்றுச் செய்யுளில் இருந்து இப் புலவன் யார் மீது இச் செய்யுளை இயற்றியுள்ளார்? எச் சந்தர்ப்பத்தில் இதனைப் பாடியுள்ளார் என்பன அறிந்து கொள்ளா நிலையில் உள்ளன. ஆனால், இவர் பாடியுள்ள அப்பாடலால் இவர் கல்வியைப்பற்றி நல்ல எண்ணம் கொண்டவர் என்பதும், அக் கல்வியைப் பயின்றவரை நன்கு பாராட்டுபவர் என்பதும் புலனாகின்றன. தாம் பாடியுள்ளவனைப்பற்றிக் கூறும்போது, "கல்வியென் என்னும் வல்லாண் சிறுஅன்" என்று கூறி அந்த அளவில் நிறுத்தாது, அவன் தன் தாயினால் மிகவும் விரும்பப்பட்டவனாக இருந்தான். இதற்குக் காரணம் இவன் கற்ற கல்வியே யாகும் என்பதை

> "ஈன்ற தாயோ வேண்டாள் அல்லள்
> கல்வியென் என்னும் வல்லாண் சிறுஅன்"

என்று கூறியுள்ளார். குறுந்தொகையில் இவரால் பாடப்பட்ட பாட்டு, அன்பு கலந்த இரு காதலர் தோழியின் துணை கொண்டு கூடி இன்புற்று வருகையில், பகலில் வந்து செல்

லும் காதலனைப் பார்த்து, "நீ இரவிலும் இங்கு வந்து இல்லத்தில் தங்கித் தலைமகளை விட்டுப் பிரிந்து போதல் கூடாது" என்பதை வற்புறுத்திக் கூறுவதாகும். இப்படிக் கூறும் போது தோழி அத்தலைவனிடம் நாகரிகமான முறையில் கூறித் தங்குமாறு பேசியதுதான் நாம் இங்குப் பாராட்டற்குரியது. தலைமகனை நோக்கி "நீ இங்கு இரவு தங்கித்தான் போக வேண்டும்" என்று வன்மை மொழியால் கூருமல், "இங்கு இரவு தங்கிப் போவதில் தவறு உண்டாகுமோ?" என்று வினவுடன் கலந்து கூறினாள். இவ்வாறு வினயமாகக் கூறினால், எவர்தாம் இணங்காது எதிர்த்துப் பேசுவர்? இத்துடன் இத் தோழி நீ இரவு நேரத்தில் இவண் வருவது எவரும் அறிதல் கூடாது என்பதையும் சமத்காரமாக "வரை மருள் நெடுமணல் தவிர்ந்து நின்று அசைஇ" என்று பேசியதாகப் புலவர் கூறுகிறார். அதாவது, "தலைவ! உன் தேரை மலையும் மருளும்படி மணல் குவிந்து மலைபோல் காணப்படும் மணல் குன்றுகளின் பின் மணல் பரப்பில் நிறுத்தி விட்டு வருக" என்பதாம்.

அகநானூற்றில் காணப்படும் செய்யுட்களில் இப் புலவர் கூறும் கருத்துக்கள் சில. அவற்றுள் ஒன்றில் தலைவியைக் கூடிச் செல்லும் தலைவனிடம் தோழி, "தலைவ, நீ இப்படிப் பிறர் அறியா வண்ணம் வந்து செல்வது கூடாது. உன் காதலிக்கு நாளுக்கு

நாள் கட்டும் காவலும் மிகுகின்றன. அவள் வெளியே வர ஒட்டாமல் வீட்டிலும் அடை பட்டுவிடுவாள். ஆகவே, விரைவில் திருமணம் முடித்தற்கான செயலில் முனைந்து நிற்பா யாக" என்பதாம். இக் கருத்தினைக் கொண்ட பாடலில், தலைவி தன் தலைவன் வரமாட்டானே என்று எண்ணி ஏங்கிக் கூறியதாகத் தோழித் தலைவனிடம் கூறிய அடிகள் மிகவும் இரக் கத்தை எழத்தான் செய்கின்றன. "வாரார் கொல் எனக் காண்தொறும் பருவரும்" பரு வருதலாவது துன்புறுதலாம்.

அதே அகநானூற்றில் காணப்படும் மற் றொரு பாடல் தலை மகன் கேட்குமாறு தலைவி யினிடம் தோழி சிலவற்றைக் கூறியது போல அமைந்தது. அப்படித் தோழி கூறு மாறு பாடியதன் கருத்துத் தலைவியைத் தலை வன் விரைவில் மணந்துகொள்ளத் தூண்டு தற்கே யாம். அப் பாடலில் கூறப்பட்டுள்ள உவமை படித்துச் சுவைத்தற் குரியது. அதா வது வேங்கை மரத்தின் மலர்கள் பாறைகளில் சிந்திக் கிடக்க, அத் தோற்றத்தைக் கண் ணுற்ற யானைகள், "ஐயோ புலி பாறையின் மீது படுத்திருக்கிறது போலும்! அது நம் மைக் கண்டால் பாய்ந்து நம்மைக் கொன்று விடும்" என்று எண்ணி ஓடிவிடும் என்ப தாம். அதனைப் புலவர் "வேங்கை ஒள்வீ புலிப் பொறி கடுப்பத் தோன்றலின் கயவாய் இரும்பிடி இரியும்" என்று பாடியுள்ளார்.

# 10. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

**செழியன்** என்னும் சொல் பாண்டியரைக் குறிக்கும். இங்குக் கூறப்பட்ட பாண்டிய மன்னர் தோற்றத்தால் நீண்டு வளர்ந்து காணப்பட்ட காரணத்தால் **நெடுஞ்** செழியர் என அழைக்கப்பட்டனர் எனலாம். இவர் வடவர்களாகிய ஆரியரோடு எதிர்த்துப் போரிட்டு அவர்கள் படையினைப் புறமுதுகு காட்டி ஒடுமாறு செய்தவர். இதனால் இவர் **ஆரியப் படை கடந்த** நெடுஞ் செழியன் என்ற சிறப்பு மொழிகளால் சிறப்பிக்கப்பட்டனர். **கடந்த** என்னும் மொழி எதிரிட்டு வென்ற என்னும் பொருளைத் தந்து நிற்கும். இவர் தோற்றப் பொலிவின் காரணமாக நெடுஞ் செழியர் என்று அழைக்கப் பட்டாரேனும், பாண்டியர் குடியினர் என்பதைத் தெற்றெனத் தெளிவிக்கப் **பாண்டியன்** ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன் என்று குறிப்பிடப்பட்டார்.

இப் பாண்டியரே கோவலனை ஊழ்வலி காரணமாகக் கொல்லுவித்தவர். என்றாலும், குற்றத்தை உணர்ந்து அக் குற்றம் செய்த காரணத்தால் உம் உயிரையும் விடுத்துத் தம் நீதி நெறியினை நிலை நாட்டியவர். இல்லையானால்,

" பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள் "

என்று கூறிவிட்டு இறப்பாரோ? இறவார் அன்றோ? இங்ஙனம் நீதியை நிலை நாட்டக் கருதித் தம் உயிரை நீத்த மேம்பாட்டினை ஆசிரியர் இளங்கோ அடிகளாரும் நன்முறையில் அறிவித்திருப்பது இவ்வரசர் பிரானது அருமையினை அறிவிக்கின்றது. அவ்வாறு அறிவிக்கும் சிலப்பதிகார அடிகள்

" வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது "

என்பன. இத்தகைய மன்னர் பிரானார் நீதியில்தான் கண்ணும் கருத்துமாய் இருந்தார் என்று கூறுதற்கு இல்லை. கல்வியிலும் தம் கருத்தை முற்றிலும் செலுத்தியவர் என்பதை இவர் புறநானூற்றில் கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறும் பாடல் ஒன்றால் நன்கு அறிகிறோம். தமக்கு மிகுந்த புலமைப் பெருக்கு இருந்தால் அன்றி இவர் இத்தகைய கருத்துடைச் செய்யுளை யாத்திருக்க இயலாது.

இவர் கல்வியின் மாண்பினைக் கூறும் பாட்டில், கல்வி கற்பதாயின், ஆசிரியர்க்குப் பெரும் பொருள் கொடுத்தும், அவர்க்குத் துன்பம் வந்த போதெல்லாம் உதவி புரிந்தும் கற்றல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். நாட்டிற்கு அடிப்படையாவார் கற்றவர்.

ஆதலின், அங்ஙனம் கற்றவர் பலரை ஆக்க வேண்டியவர் கணக்காயர், ஆதலின் கணக்காயர்கட்கு எந்த விதமான துன்பமும் நேரா வண்ணம் தம் காலத்தையும் கருத்தையும், குடிமக்களின் கல்வி அறிவு மிகுதற்குச் செல வழிக்கும் பொருட்டுப் பெரும் பொருள் கொடுக்க வேண்டும் என்று அரசர் திருவாயால் கூறியிருப்பதை நாம் நன்கு சிந்திக்க வேண்டும். மாணவர்களும் ஆசிரியரிடத்து அன்பும் மரியாதையும் காட்டி ஆசிரியரை வழிபட்டுக் கற்றால் அன்றிக் கல்வி செழிக்காது என்றும் குறிப்பிட்டுள்ளார். பிறப்பால் ஒருவன் சிறப்படைய இயலாது. கற்றிருந்தால் மட்டும் சிறப்படையலாம் என்றும் கூறியிருக்கும் கருத்தை ஒவ்வொருவரும் உளம் கொள்ளுதல் வேண்டும். கற்றவனையே பெற்ற தாயும் விரும்புவள் என்பதையும் அப்பாடலில் அறிவித்துள்ளார். நாடும் அரசும் அறிவுடையோர் சொல்படி கேட்கும் என்று அறிவித்திருப்பதையும் நாம் நன்கு சிந்தித்தல் வேண்டும். வயதுக்கும் பெருமையில்லை. வயதால் சிறியவனாயினும் அறிவால் பெரியவனாயின், அவனே யாவரினும் சிறந்தவன் என்பது இவர் கருத்து. இல்லையானால்,

" ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும் "

என்று கூறுவாரா? கூறார் அன்றோ?

# 11. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்

இங்கு இதுபோது கூறப்படும் புலவர் பாண்டிய மரபினர் என்பது இவரது பெயரில் ஈற்றில் உள்ள சொல்லாகிய பாண்டியன் என்பதனால் நன்கு தெரிய வருகிறது. இவர் வெறும் பாண்டியன் என்று அழைக்கப் பெறுமல் **ஒல்லையூர்தந்த பூதப் பாண்டியன்** என்று அழைக்கப்பட்டமைக்குக் காரணம், புதுக்கோட்டையைச் சார்ந்த **ஒல்லையூர்** என்னும் ஊரை வென்று தம்மடிப்படுத்தி அரசு புரிந்தமையே ஆகும். ஒல்லையூர் என்பது புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ள **ஒலிய மங்கலம்** என்னும் ஊரிலுள்ள சாஸனத்தால் அவ்வூரைச் சார்ந்தது என்பது தெரியவருகிறது. தென்னுட்டில் உள்ள **பூதப் பாண்டி** என்னும் ஊர் இவர் பெயரால் அமைக்கப்பட்டது என்ற காரணத்தால் பூதப் பாண்டியன் என்று கூறப்பட்டதாகவும் தெரிகிறது. இவர் செய்யுள் செய்வதிலும் வல்லவர். போரிடுவதிலும் வல்லவர். இவர் செய்யுள் செய்வதில் வல்லவர் என்பதை இவரது பாடல்கள் புறநானூற்றில் மூன்றும் அகநானூற்றில் நான்கும் ஆக ஏழு செய்யுட் கள் இருப்பதினின்று உணரப்படுகிறது. இவரது வீரத்திற்குச் சான்று ஒல்லையூர் என்னும் ஊரை அகப்படுத்தித் தம் நாட்

டுடன் கூட்டி அதன் சிறப்பையே தம் சிறப்புக்கு அறிகுறியாகப் பெயரை அமைத்துக் கொண்டதிலிருந்து தெற்றெனத் தெரிய வருகிறது.

இவரது நண்பர்கள் மையல் என்னும் ஊரிலிருந்த மாவனும் எயில் என்னும் ஊரில் இருந்த ஆந்தையும், அந்துவஞ்சாத்தனும் ஆதனழிசியும், இயக்கனும் ஆவர். இயக்கன் மிகுந்த கோபம் உடையவன் போலும்! அவனைப்பற்றி இப்புலவர் கூறும்போது வெஞ்சின இயக்கன் என்றே கூறியுள்ளார். ஆந்தை என்னும் பெயரில் மற்றொரு புலவர் ஒருவரும் இருந்திருக்கிறார். அவர் கோப்பெருஞ் சோழனது நண்பர். பிசிர் என்னும் ஊரினர். அவர் இப்பாண்டியன் நண்பர் அல்லர். அவரினும் இந்த ஆந்தை வேறு என்பதற்காகவே ஆந்தையார் என ஆர் என்னும் மரியாதைப் பன்மை விகுதி கொடுத்துப் பேசப்படாததோடு, எயில் என்னும் ஊரைச் சார்ந்த ஆந்தை என்று குறிக்கப்பட்டதை நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்னும் அரசப் புலவர்க்கு வாய்த்த இல்லக்கிழத்தியாரும் மிகுந்த ஏற்றமுடையவர். இவ்வம்மையார் பெருங் கற்புடையவர் என்று கூறப்படுவதோடல்லாமல் கவிபாடும் சிறப்பும் பெற்றவர். இவ்வம்மையார்க்குக் கணவன் மாட்டு இருந்த அன்பினைத் தம் கணவனூ

இயற்கை எய்தியபின் தாம் உயிருடன் வாழ விரும்பாமல் உடன்கட்டை ஏறி உயிர்விட்டத னுல் நன்கு அறியலாம். "இப்படி இறக்க வேண்டா. கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழலாம்" என்று பெரும் புலவர்கள் கூறித் தடை செய்த காலத்தும் அவர்களை எள்ளி நகையாடி உடன்கட்டை ஏறி உயிர்விட்ட பெருந்தகையார் இவ்வம்மையார். இத்தகைய கற்புக்கரசியாரை மனைவியாராகப் பெற்ற ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனுர் புலமை பெருக்கைச் சிறிது கவனிப்போமாக. இவர் பாடினவாகப் புறநானூற்றில் ஒன்றும், அக நானூற்றில் ஒன்றும் ஆக இரண்டு பாடல்கள் உள்ளன.

இவர் எவர்மீதும் பாடலைப் பாடிலர். தம் உள்ளக்கிடக்கையினையே ஒளியாது செய்யுள் வடிவில் கூறியுள்ளார். இச்செய்யுள் இவர் கூறிய வஞ்சின (சபதம்) வார்த்தைகளைக் கொண்டதாகும். இவர் கூறியுள்ள வஞ் சினத்தைப் பாருங்கள்: அது "நான் என் னேடு எதிர்த்துப் போரிடும் பகை அரசர்களை வென்று அவர்கள் புறமுதுகிட்டு ஓடுவதைக் கண்டிலனேயாயின், என் அருமை மனையாளை விட்டு நீங்குவேனுக. கொடுங்கோல் புரியும் வேந்தன் ஆகுக. என் நண்பர்களுடன் மகிழும் இன்பத்தை இழந்தவனுகுக. பாண்டியர் குலம்விடுத்து மற்றைய குலத்தில் பிறந்தவனுக" என்பதாம்.

இவ்வஞ்சின மொழிகளில் பல உண்மைக் கருத்துக்கள் வெளியாகின்றன. இவர் தம் மனையாளிடம் மிகுந்த அன்பு கொண்டு இன் புற்ற காரணத்தால் அம்மனையாளைப் பிரிய இயலாத வாழ்க்கை நடத்தி வந்தவர் என்பது தெரிகிறதல்லவா ? இத்தகையாளைப் பிரிதல் இயலாமைக்கேனும் பகைவரைப் புறங் காண்டல் இவர்க்கு இன்றியமையாததாயிற்று. கொடுங்கோல் அரசை மிகவும் வெறுத்தவர் என்பதும் தெரிகிறது. நண்பர்களுடன் கூடிக் குலாவும் இயல்பினர் என்பதும் அக்குலாவலை இவர் இழக்க விரும்பிலர் என்பதும் தெரிய வருகின்றன. இவற்றினும் மேலாகத் தம் குடிப்பிறப்பில் மிகுந்த பெருமைகொண்டவர் என்பதும் தெரிந்துகொள்ள நேரிடுகிறது. இவ்வீற்றுக் கருத்தை விளக்கும் செய்யுள் அடியினை இதுபோது சிந்தித்தல் சிறப்பே யாகும்.

> " மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
> தென்புலம் காவலின் ஒரீஇப் பிறர்
> வன்புலம் காவலில் மாறியான் பிறக்க "

என்ற அடிகளைக் காண்க.

இவர் பாடியுள்ள அகநானூற்றுச் செய்யு ளில் இவரது நண்பனை **திதியன்** என்பவனை வாயாரப் புகழ்வது நாம் அறிந்து இன்புறுதற் குரியது. அவனைப்பற்றிக் கூறும்போது அவன் பகைவரை வெல்வதில் வீரன் என்றும், பொதியமலையில் வாழ்ந்த பெருஞ் செல்வன்

என்றும், அழகிய தேரில் ஊர்ந்து செல்லும் சீரியன் என்றும் கூறுகிறார். அருவியின் ஓசைக்கு அவன் நாட்டு இசை வாத்தியத்தின் ஓசையினை உவமை காட்டுகிறார். பாண்டியர் குல பார்த்திபன் திதியன் என்பானை இங்ஙனம் சிறப்பிக்கின்றனர் எனில், திதியன் ஒரு சிறந்தவன் என்பதில் ஐயம் ஏற்படாதன்றோ!

# 12. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி

**வழுதி** என்பது பாண்டியரைக் குறிக்கும் மொழி. ஆகவே, இப்புலவர் பாண்டிய மரபினர் என்பதை அறிகிறோம். இவர் **பெருவழுதி** என்று குறிப்பிடப்பட்ட காரணத்தால் பெருமைக்கும் உறைவிடமானவர் என்பதும் தெரியவருகிறது. இளமை அழகு திகழப் பெற்றமையால் **இளம்பெருவழுதி** ஆயினர் போலும்! இவர் கடலில் பயணப்பட்டபோது அங்கேயே இறந்த காரணம் பற்றிக் **கடலுள் மாய்ந்த** என்ற அடை கொடுக்கப்பட்டுக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்று அழைக்கப்பட்டனர். ஆர் விகுதி கொடுத்துக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியார் என்றும் குறிப்பிடப்பட்டும் வந்துள்ளார். இளம் பிராயத்திலேயே இவர் பேர் அறிவினராகத் திகழ்ந்துள்ளார். மரியாதை பெற்றவராகவும் கருதப்பட்டார்.

இவர் பேர் அறிவினர் என்பதை விளக்க இவரால் பாடப்பட்ட புறநானூற்றுச் செய்யுள் ஒன்றும், நற்றிணைச் செய்யுட்கள் இரண்டும் பரிபாடல் ஒன்றும் சான்ருக உள்ளன.

புறநானூற்றுப் பாடல் அரிய பெரிய நீதியை விளக்கும் நிலையில் உள்ளது. பரோபகாரம் செய்யவேண்டிய இன்றியமையா

மையை நமக்கு நன்கு விளக்குகிறது. உலகம் இடையருது அழிவுருமல் இருத்தற்குக் காரணங்களாக இவர் குறிப்பிடுவன மிகமிகப் பாராட்டற்குரியனவாகும். கிடைத்தற்கரிய தேவாமுதம் கிடைப்பினும், தனித்து உண்ணுமல் பிறர்க்கும் ஈந்து உண்பவர் நாட்டில் இருப்பதாலும், எவரோடும் வெறுப்பில்லாதவர்களும், அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சுபவரும், சோம்பலின்றி இருப்பவரும், புகழுக்காக உயிரையும் கொடுப்பவரும் பழி காரணமாக உலகம் பெறுவதாயினும் அதனை ஏற்க இசையாதவர்களும், மனக்கவற்சி இல்லாதவர்களும், தமக்கென முயலாமல் பிறர்க்காக முயல்பவர்களும் உலகில் இருக்கின்ற காரணத்தால் இவ்வுலகம் நிலைத்திருக்கிறது என்றும் குறிப்பிடுகிருர். இப்படிக் கூறிய பாடலில் உயிராய் விளங்கும் அடிகள்

"புகழ்எனில் உயிரும் கொடுக்குவர்; பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர்"

என்பன. நற்றிணைச் செய்யுட்பகுதிகள் சுவைதரும் செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. தாய் தன் மகள் புதுமணம் பெற்ற காரணத்தால் வண்டுகள் மொய்க்கும் தோளுடையளாய் இருப்பது குறித்துத் தோழியை நோக்கிக் காரணம் கேட்டபோது, தோழி சமத்காரமாக "சந்தன விறகை அடுப்பில் இட்டதனுல், அதில் சூழ்ந்திருந்த வண்டுகள் போக்கிடம் வேறு இன்றி உன்

மகள் புது மணத்தில் ஈடுபட்டு மொய்த்தன்'' என்று கூறும் மொழிகள் தோழியின் பேச்சு வன்மையினைக் காட்டி நிற்கின்றன. இச்சுவை யடங்கிய செய்யுளை நற்றிணையில் காண்க.

பரிபாடலில் இவரால் பாடப்பட்ட செய்யுளால் இவருக்குத் திருமால்மீதுள்ள பற்றும், திருமால் இருஞ்சோலை மலைமீதுள்ள அன்பும் நன்கு புலனாகின்றன. இக்காரணங்கொண்டு இவர் வைணவ நெறியினர் என்று கூடக் கூறிவிடலாம். திருமாலிடத்தில் கொண்டுள்ள பற்றினும் இவர் திருமாலிருஞ் சோலையாகிய தலத்தில் கொண்டுள்ள பற்று மிகமிக விஞ்சி நிற்கின்றது. எல்லா மலைகளிலும் திருமால் இருஞ்சோலைமலை சிறந்தது என்கிறார். அம் மலை திருமால் போன்றது என்கிறார். மக்களை நோக்கி அவர்கள் நல்வழி படுதற் பொருட்டு "மக்காள்"! திருமால் இருஞ்சோலையினை நினைமின்! அதன் புகழைக் கேண்மின்! அதனைக் கண்டு பணிமின்! தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்மின்!'' என்று கூறுவன இவரது பெருங்கருணைத் திறனைப் பெருக்கிக் காட்டுகின்றன. இப்பரிபாடலால் திருமால் இருஞ்சோலையின் இயற்கை அழகை இனிதின் நுகரலாம். மந்தி (குரங்கு,) வரை வரைபாய, மடமயில் அகவ, குயில் இனம் கூவ, சுனை எலாம் மலர, சுனை சூழ் சினை எலாம் செயலை (ஒரு வகைமலர்) மலர, வேங்கை மலர என்பன, இயற்கை யழகை

இனிதின் எடுத்துக்காட்டும் தொடர்கள். மோட்ச இன்பம் அடைதல் அரிது. அவ் அருமையினையும் எளிமையாகத் திருமால் இருஞ்சோலையினைப் போற்றினால் பெறலாம் என்றும் குறிப்பிடுகிறார். அத்திருமால் இருஞ் சோலையின் அடிவாரத்திலேயே தாம் வாழும் பேற்றை விரும்புகிறார் இவ்வரசப் புலவர் எனில், திருமால் இருஞ்சோலை யிடத்து இவருக்கு இருக்கும் பற்றின் பெருக்கத்தை வேறு எதனால் விளக்கிக் கூற இயலும்? இங்ஙனம் கூறும் பரிபாடல் அடிகள்.

> " இருங்குன்றத்து அடி உறை இயைகஎனப்
> பெரும்பெயர் இருவரைப் பரவுதும் தொழுதே "

என்பன.

# 13. பாண்டியன் அறிவுடை நம்பி

தமிழ் இலக்கணத்தில் விகுதிபெற்ற ஆண் பாற் பெயர்களும், விகுதிபெருத ஆண்பாற் சிறப்புப் பெயர்களும் உண்டு. அவை விடலை, நம்பி, வேள் முதலியன. அத்தகைய சிறப்புப் பெயர் உடையர் இப்பாண்டியர் குலப்பாவலர் என்பதற்காகவே **நம்பி** என்ற சொல்லாலேயே குறிக்கப் பட்டுள்ளார். இவரது சிறப்பு மற்றைய ஏனைய காரணங்களால் அமைந்தது என்ருலும், அறிவு காரணமாகவே இவர்க்கு அமைந்த சிறப்பாகும் என்னும் காரணத்தை முன்னிட்டடே அதனை நன்கு விளக்கமுறத் தோற்றுவிக்கவே **அறிவுடை** நம்பி என்று அடை கொடுத்தும் மொழியப்பட்டார். இவ் வறிவுடை நம்பி பாண்டியர்குலப் பார்த்திபர் என்பதை அறிவிக்கப் பாண்டியன் அறி வுடை நம்பி என்று சிறப்பிக்கப்பட்டனர். பாண்டியன் என்பதனுல் அரச இனத்தினர் என்பதும் அறிவுடை என்றதனுல் அறிஞர் இனத்தினர் என்பதும் நாம் அறிந்மு இன்புறுதற் குரியனவாகும். இத்தகைய பெருமைசான்ற புரவலர்ப் புலவரைப் பாடிய புலவர் பெருமான் பிசிராந்தையார் என் பவர். பாண்டியன் அறிவுடை நம்பி தாமே அறிவு சான்ற பெருமகனுராக இருந்தும், புலவர் பெருமக்கள் கூறும் அற வுரைகளை அகங்குளிரக் கேட்டு அதன்படி நடக்கும்

இயல்பினர் என்பது பிசிராந்தையார் இவருக்குக் கூறியுள்ள அறவுரைப் பகுதிகளால் அறிய வருகிறது. அவ்வறவுரை அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தப் பட்டதேனும், அகிலம் காக்கும் எல்லா அரசர்க்கும் உகந்த அறவுரையாகும்.

பிசிராந்தையார் பாண்டியன் அறிவுடை நம்பியை நோக்கி, "மன்னு! ஒருமா என்னும் அளவில் குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லினை அறுத்துக் கவளம் கவளமாக யானைக்கு உண்ணுமாறு செய்துவரின், அவ்வுணவு பல நாளைக்கும் ஆகிவரும். அவ்வாறு இன்றி, நூறு என்னும் எண்ணிக்கைக்குரிய பெரு நிலங்களைப் பெற்றிருந்தும், யானையைத் தனித்து விட்டு உண்ணுமாறு செய்தால், அவ் யானை உண்ணும் உணவினும் அதன் காலால் மிதியுண்டு அழியும் நெல் மிகுதியாகி, அப் பெரு எண்ணிக்கையுள்ள நிலங்களிலிருந்து கிடைக்கும் நெல் சின்னுட்களுக்கே உதவக் கூடியதாக இருக்கும். இதுபோலவே அரசர்களும் குடிமக்களிடமிருந்து வரிப் பணமாகச் சிறிது சிறிதாகப் பெற்ருல், நாடு செழித்துப் பல நாள் அழிவின்றித் துலங்கும். அரசரும் பன்னுள் நலனுற வாழ்வர். அவ்வாறு இன்றிக் குடிமக்களை வருத்தி மிகுதியாக வரிப் பணத்தை வாங்கிஞல் நாடு விரைவில் அழிந்துபடும். அரசரும் கெட்டொழிவர். ஆகவே, உறுதி கூறும் நல்லமைச்சைப்

பெற்று அரசர் அரசு புரிதல் தக்கது'' என்று அறிவுறுத்தியுள்ளார். இத்துணைக் கருத்துக் களையும் புலவர் பிசிராந்தையார் 'கூறிய பாடலில் படித்து இன்புறும் ஒரு பகுதி,

'' யானைபுக்க புலம் போலத்
தானும் உண்ணுன் உலகமும் கெடுமே ''

என்னும் அடிகளே என்க.

இத்தகைய மாண்புடைய புலவர் பெருமானின் அறவுரைகளைச் செவி சாய்க்கும் அரசப்புலவர் அறிவு சான்றவராய் அருங்கவி புனையும் ஆற்றல் பெருது இருப்பாரோ? ஒருக்காலும் இரார். ஆகவே, இவரும் ஒரு செய்யுளினைச் செய்துள்ளார். அது புறநானூற்றில் மிளிரும் செய்யுளாகும். அப்பாடல் பிள்ளைப் பேற்றின் மாண்பினை நன்கு எடுத்து மொழிவது. இப்புலவர் பெருமானுக்கு எந்தக் கருத்திலும் தம் மனம் செல்லாது புத்திர பாக்கியத்தின் பெருமையினைக் கூறக் கருதியது ஒரு சிறப்புத்தான். இவர் பெருஞ் செல்வம் உடைமையைக் கூடப் பெருஞ் சிறப்பாகக் கருதிலர். அச் செல்வம் காரணமாகப் பலரோடு உண்டு களிக்கும் களிப்பினையும்கூடச் சிறப்பாகக் கருதிலர். ஆனல், பலரோடு உண்ணும் காலத்துத் தத்தித்தத்தி நடந்து வந்து, தம் சிறிய கையை நீட்டி உண்கலத்தில் வைக்கப்பட்ட உணவில் கையை வைத்து அவ்வுணவை எடுத்துத் தரையில் சிதறி அதனைப் பிசைந்து, வாயால், கவ்வி மீண்டும் கையால் துழாவியும்

நெய் பெய்த சோற்றை உடம்பில்படச் சிதறி யும் இன்புறுத்தும் மக்களைப் பெற்று வாழ்தலே செல்வத்தின் சிறப்பு என்றும் பலரோடு உண்ணும் களிப்பிற்கும் சிறப்பு என்றும் கருதினர். இத்தகைய மக்கட் பேற்றைப் பெருதவர்கட்குத் தாம் உயிர் வாழும் நாளில் பயனுகிய முடிக்கப்படும் பொருள் இல்லை என்றே கூறி விடுகின்ருர். மக்கள் செய்யும் அட்டகாசத்தினை எவ்வளவு அழகாகத் தம் செய்யுளில் சித்திரித்துள்ளார் பாருங்கள் !

“ குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறும் மக்கள் ”

என்பது அச்சொல் சித்திரம்.

# 14. தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

**நெடுஞ்செழியன்** என்பது பாண்டியர் குலத்துப் பார்த்திபர் பலர்க்கும் பெயராக அமைந்துள்ளது. நெடுஞ்செழியன் என்ற பெயரைத் தாங்கி அறிவு சான்று கவிபாடும் காவலராகத் திகழ்ந்தவர் இருவர். ஆனால், அவ்விருவரும் வேறு வேறு ஆவர் என்பதை விளக்க நம் முன்னோர் அவர்கட்கு முன்பு சில சொற்களை அடைமொழியாக அமைத்துக் குறிப்பிட்டு வந்தனர். அவர்களுள் ஒருவர் **பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன்**. மற்றவர் **பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** என்பவர். இவரது பெயர் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியர் எனவும் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற செழியன் எனவும் நெடுஞ்செழியன் எனவும் வழங்கப் பெறும். ஈண்டுப் பின்னவர் வரலாற்றைச் சிறிது பார்ப்போமாக.

இவ்வரசர் பெருமான் பாண்டிய மரபினர் என்பது இவர்க்கு முன்னும் பின்னும் அமைந்த சொற்களே விளக்கி நிற்கின்றன. இவர் பல புலவர்களால் பாடப்பட்ட பெருமை சான்றவர். இவரைக் கல்லாடனார், மாங்குடி கிழார், இடைக்குன்றூர் கிழார், மாங்குடி மருத னார், நக்கீரனார் என்பவர்கள் சிறப்பித்துப்

பாடியுள்ளார். புலவர்கள் பலரால் பாடப் பட்ட புரவலர் இவர் எனில், இவரது பெருமை சொல்லாமலே புலப்படுவதாகும்.

இவர் தம் இளமைப் பருவத்தில் தலையாலங்கானத்தில் கோச்சேரமான் யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு போர் புரிந்து, அவனைச் சிறைப்படுத்தியவர். இக் காரணம் பற்றியே **தலையாலங்கானத்துச்** செருவென்ற நெடுஞ்செழியன் என்று சிறப்புப் பெயர் பெற்றனர். இம் மன்னனை வென்றதோடு அல்லாமல், **சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்** என்பாரையும் வென்றவர். வேள் எவ்வியின் மிழலைக்கூற்றத்தையும் கைக்கொண்டவர். மறக்கள வேள்வி, அறக்கள வேள்விகளைச் செய்தவர். மறக்கள வேள்வியாவது, பேய் மகள் வயிறார உண்ணும்படி வீரன் களவேள்வி செய்தல்; அறக்கள வேள்வியாவது யாகாதி காரியங்கள் புரிதல். புலவர்களிடத்துப் பேர் அன்பு கொண்ட உத்தம குணத்தர் இம் மன்னர். இத்தகைய மன்னர்பிரானைக் குடபுலவியனார் பாடும்போது, இம் மன்னரது முன்னோர் அகன்ற உலகைத் தம் முயற்சியால் கொண்ட புகழுடையவர் என்றும் இயமனும் இரங்கத்தக்க நிலையில் போர்க்களத்தில் இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்றவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கல்லாடனுர் என்னும் புலவர் இவரது தலையாலங்கானத்துச் செருவென்ற செய்தி யினைக் குறிப்பிட்டுள்ளார்.

மாங்குடி மருதனுர் இவர் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் முத்தூர்க் கூற்றத் தையும் வென்ற சிறப்பையும், இவர் மறக்கள வேள்வி அறக்கள வேள்வி செய்த சிறப்பினை யும், இம்மன்னரால் தோல்வியுற்ற பகை மன் னர் வீரசுவர்க்கம் புகுந்து பேறு பெற்றனர் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்குன்றூர் கிழார் இம்மன்னரது குணப்பண்பினை அழகுறப் புலப்படுத்தியுள் ளார். இவ்வரசப் பெருமகனுர், "தம்மீது வெகுண்டுவரும் வீரரைக் கண்டு மதித்ததோ, அன்றி அவமதித்ததோ இலர். பகைவரைப் பற்றிக் கொன்றதற்காக மகிழ்ந்ததோ அன்றி இங்ஙனம் எல்லாம் செய்தோமே என்று தம்மை மிகுத்து எண்ணியதோ இல்லை" என்பன இப்புலவர் மகிழ்ந்து கூறும் கருத் துக்கள். இம் மன்னர்பிரானுடைய மாண்பு களைப் பரக்கக் காணவேண்டுமானுல் மாங்குடி மருதனுர் பாடியுள்ள மதுரைக்காஞ்சி என் னும் தனி நூலிலிருந்தும் நக்கீரர் பாடியுள்ள நெடுநெல்வாடை என்னும் நூலின் மூலமும் அறியலாம்.

மாங்குடி மருதனுர் தம் மதுரைக்காஞ்சி யில், இம்மன்னர் தம் பகை மன்னர்மீது படை எடுத்துச் சென்றதையும் அம் மன்னர்களின்

அரண்களையும் காவல் மரங்களையும் அழித்த நிலைகளையும் தம் ஏவல்படி கேட்டவர்கட்கு அருள்செய்த அருளிப்பாட்டையும், அங்ஙனம் கேளாதவர்களை அழித்து அவர்கள் நாடுகளைப் பாழாக்கிய தன்மைகளையும் அழகுறக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

இம் மன்னர் வேற்றரசரை வென்று கொணர்ந்தவற்றைத் தமக்கு என்று வைத்துக் கொள்ளாது, பிறர்க்கு என்று கொடுக்கும் பெற்றியர். இஃது, "உரிய எல்லாம் ஓம்பாது வீசி," என்ற தொடரால் விளக்கமாகிறது. இம்மன்னர் பொய்க்குணத்தை அறவே வெறுத்தவர் ஆவர். பொய் கூறுவதனால் தேவர் உலகமும் தேவாமுதமும் கிடைப்பதேனும், அவற்றையும் கைவிட்டு மெய்யையே நிலை நிறுத்தும் பெற்றியர். இந்தப் பண்பினை மாங்குடி மருதனார் "உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும், பொய் சேண் நீங்கிய வாய் நட்பினை" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந் நெடுஞ்செழியன் தம் வெற்றிக்குப் பிறகு தமக்குரிய யாவரையும் வரவழைத்து அவர் அவர்கட்கு நற்பொருள்கள் ஈந்து மகிழ்ந்தவர். இத்தகைய குறிப்புக்கள் பல அம் மதுரைக்காஞ்சியில் காணப்படுகின்றன. அவற்றை எழுதப்புகின் அதுவே ஒரு தனி நூலாக முடியும்.

இம் மன்னர் சார்பில் பாடப்பட்ட நெடுநெல்வாடை இம் மன்னர் பகைமேல் சென்ற

போது, பிரிந்து வருந்தும் தலைவிக்கு அவ் வருத்தம் தீரும்படி " இவர் பகையை வென்று விரைவில் வருவாராக" என்று வெற்றி தரும் தேவதையைப் போற்றுபவர் கூறும் முறையில் நக்கீரரால் பாடப்பட்டது. இதன் மூலம் இப் பாட்டுடைத் தலைவருக்கும் தலைவிக்கும் இருக் கும் உண்மைக் காதல் அன்பு தெற்றத் தெளி யப் புலனாகும். இதன் விரிவை அப் பெரு நூலில் காண்க. விரிப்பின் அது பரந்து படும் என்று இந்த அளவில் இது குறிப்பிடப் பட்டது.

இனி இம் மன்னர்ஏறு, பிற புலவர்களால் பாடப்பட்ட பெருமை நிறைந்ததோடு நில் லாமல் தாமாகப் பாடியுள்ள பாட்டின் பொருள் நயம் கண்டு இவரது வரலாற்றுச் சுருக்கத்தை இனிதின் முடிப்போமாக.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியர் பாடல் ஒன்று புற நானூற்றில் காணப்படுகிறது. அப்பாடல் இவரது உள்ளக்கிடக்கையின் உண்மையினை உணர்த்துவதாகும். பாட்டின் வேகம் இவரது விறு விறுப்பைக் காட்டவல்லது. அது சபதம் செய்யும் நிலையில் அமைந்த பாடல்.

பகை வேந்தர் தம்மை வெல்ல எண்ணவும் கூடாது என்பது இவரது கருத்து. இவரது யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை கண்டு பகைவர் அஞ்ச வேண்டும் என்பதும், இவர் கருத்து. அங்ஙனம் அஞ்சாது தம்

செருக்குக் காரணமாகப் போர்க்கு எழுந்தால் அவர்களை வென்று அடக்குவேன் என்ற உறுதிப் பாட்டையும் உடையவர். அவ்வாறு அப் பகைவேந்தரை வென்றிலேன் எனில், "எந் நிழலில் வாழும் குடி மக்களும் மற்றும் உள்ளாரும் " இவ் விறைவன் கொடியன் " என்று கூறிக் கண்ணீர் விட்டு என் குடியினைப் பழித்து, "கொடுங்கோலன் இவன் " என்று கூறத்தக்க நிலையைப் பெறுவேனாக" என்றும், புலவர் என் நாட்டைப் பாடாது ஒழிவாராக என்றும், இரப்பவர்க்கு ஈயாத உலோபத் தன்மை என்னை வந்து உறுவதாக " என்றும் வஞ்சினம் கூறியவர்.

இவ்வாறு இவர் கூறிய வஞ்சினமொழிகளில் இம் மன்னரது உளப் பண்புகள் பல வெளியாகின்றன. இவர் தம் நிழலில் வாழும் மக்கள் தம்மைக் கொடியன் என்று கூறாத வகையிலும், கண்ணீர் சிந்தாத நிலையிலும், கொடுங்கோலன் என்ற பெயரை எடுக்காத நிலையிலும் அரசு புரிய வேண்டும் என்ற கொள்கையும், அவ்வாறே அரசு புரிந்தவர் என்பதும், தம்மைப் புலவர்கள் பாடாது இருப்பது தம் வாழ்க்கைக்கே இழுக்கு என்று அறிந்து, புலவர் பாடும் வகையில் கொடையும் வீரமும் கொண்டு விளங்க வேண்டும் என்பதை அறிந்து வீரமும் ஈரமும் கொண்டு விளங்கத் தம் வாழ்நாட்களைக் கழித்தவர் என்பதும் மாங்குடி மருதனாரைக் குறிப்பிட்டுப் பேசு

கையில் "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன்" என்று பாராட்டி இருப்பதால் அவர்மாட்டு இவர்க்கு இருந்த மதிப்பும் புலனுகின்றன.

இவரது பாட்டின் இறுதி அடி "இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே" என்று முடிவதில் இருந்து, இம்மன்னர் இரப்பதற்கு ஈயா வறுமை நிலையினை அடையாதிருக்கும் பொருட்டேனும் பகை மன்னரை வெல்ல முயன்று நின்றவர் என்பது உறுதியாகிறது.

இங்ஙனமெல்லாம் அரசர்கள் தம் அரச போகத்தில் தாம் இருந்தும், அவ்வரச போகத்தில் அழுந்திக் கிடக்காமல் அருங்கவி பல புனைந்து அருங் கருத்துக்களையும் மக்களுக்கு அறிவுறுத்திச் சென்றிருக்கின்றனர். அவர்கட்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

# 15. தொண்டைமான் இளந்திரையன்

இது வரையிலும் சேர சோழ பாண்டியர் ஆகியமூவேந்தர் மரபைச்சார்ந்த அரசர்குலப் புலவர்களைப் பற்றிப் படித்து வந்தனம். அவ் வேந்தர் குடிகளுள் சோழர் குடித் தொடர்புடைய இளந்திரையன் என்பாருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களையும் சிறிது காண்போமாக.

நாகபட்டினத்துச் சோழன் பிலத் துவாரத்தின் வழியே நாகலோகத்தைச் சார்ந் தனன். அங்கு இருந்த நாக கன்னிகையாகிய பீலிவளை என்பாளைக் கண்ணுற்றனன். கண் ணுற்ற சோழ மன்னன் அவளை மணந்து கொள்ள மனம் கொண்டனன். இக்கருத்தை அவளுக்குக் கூறியதும், பீலிவளை, "மன்ன! இப்போது என்னை உன் வேட்கைக் காரண மாக மணக்க விரும்புகிறாய். அங்ஙனமே நம் இருவர் உள்ளமும் ஒன்றுபட்டு மணந்தபின், நம் இருவர்க்கும் இன்மகவு தோன்றினால் அம் மகவின் கதி என்னாவது? யானோ நாகலோக வாசி, நீரோ மண்ணுலக வாசி." என்று வினவ நாகபட்டினத்துச் சோழன் "மாதே, நீ இது குறித்துக் கவலை கொள்ளவேண்டா! உனக்கு என்னால் பிள்ளைப் பேறு கிடைக்குமானால், அப்பிள்ளையினைத் தொண்டைக் கொடியால் பிணைத்துக் கடலில் இட்டு விடுக. அம்

மைந்தன் யதோர் இடையூறும் இடையில் எய்தாது கரையைச் சாரின், அவனுக்கு என் அரசுரிமையைத் தருகின்றேன்'' என்று உறுதி கூறினன்.

சோழனது உரைகளை நம்பி பீலிவளையும் அவனை மணந்து கொண்டனள். சில காலம் பீலிவளையோடு இன்புற்ற சோழன் தன்னுடு திரும்பி விட்டனன். இறைவன் அருளால் இன் மகவும் பிறந்தது. நாகபட்டினத்துச் சோழன் கூறியபடி குழந்தையைத் தொண் டைக் கொடி அடையாளமாகக் கட்டிக் கடலில் இட்டனள். குழந்தையும் ஆண்டவன் அரு ளால் இடையில் அவலம் ஒன்றும் உருமல் கரையை அடைந்தது.

இம் மகன் கடல் அலையால் உந்தப்பட்டுக் கரையை அடைந்தமையால் இளந்திரையன் என்று கூறப்பட்டனன். தொண்டைக் கொடி யினுல் இவன் பிணிக்கப்பட்டு அக் கொடி யுடன் கரையை அணுகியமையால் தொண்டை மான் இளந்திரையன் எனப்பட்டனன். திரை யன் எனவும் திரையல் எனவும் இவனை நூல் கள் குறிப்பிடும்.

இம் மகவு சோழ மன்னனுல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்க் கப்பட்டுத் தக்க வயது வந்ததும் காஞ்சியம் பதிக்கு அரசராக்கப்பட்டார். சோழர் குடிக் கலப்புடையராயினும், மூவேந்தரோடு ஒருங்கு வைத்து எண்ணப்பட்ட பெருமை சான்றவரா

யினும், மூவேந்தர் மரபுடன் இவர் இணைத்து வழங்கப்படாமல் குறுநில மன்னர் மரபுடன் இணைத்துப் புலவர்களால் பேசப்பட்டனர்.

இவர் புலவர்களால் பெரிதும் பாராட்டப் பட்டவர். இவரைப் புகழ்ந்து தனி நூல் ஒன்றும் பாடப்பட்டுள்ளது. அந் நூலே பத்துப்பாட்டில் காணப்படும் பெரும்பாணாற் றுப் படையாகும். நக்கண்ணனார் என்னும் புலவரும் இவரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

பெரும்பாணாற்றுப் படையின் மூலம் இளந்திரையர் வாழ்க்கைக் குறிப்புக்கள் பல புலனாகின்றன. இளந்திரையரது செங் கோன்மை காரணமாக வழிப் போவாரை வெட்டி அவர்கள் கையகத்துள்ள பொருள் களைக் கொள்ளும் வழிபறிக் கொள்ளையர் இலர். இடி விழுந்து இன்னல் உறுத்தாது. பாம்புகள் தீண்டிப் பயம் உறுத்தா. கொடிய விலங்குகள் கொடுமைகள் செய்யா. இளந் திரையருடன் மலைந்தவர் தேயம் பாழ்படும். நயந்தவர் தேயத்தில் நன் பொன் பொலிவு பெறும். முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுவனவற்றை அளிப் பர். புலவர்கட்குப் பேர் அணிகலன்களும் பிற கலங்களும் கொடுத்து மகிழ்வர். இரவல ரது கிழிந்த ஆடையை நீக்கி நல்லாடையினை ஈவர். சோறும் கறியும் கொடுத்து உபசரிப் பவர் என்றெல்லாம் பெரும்பாணாற்றுப்படை கூறிப்பிட்டு இம் மன்னரைப் புகழ்கிறது.

இவ்வாறான பெருமைகட்கு உறைவிடமான் இளந்திரையன் புலவரால் பாடப்படும் புரவலராக மட்டும் இன்றித் தாமே கவிபாடும் காவலராகவும் இருந்தனர். இவர் பாடிய பாடல்களாக நற்றிணையில் மூன்றும் புறநானூற்றில் ஒன்றும் காணப்படுகின்றன. இறையனார் அகப்பொருள் என்னும் நூலும், நன்னூல் மயிலை நாதருரையும் இவரால் இளந்திரையம் என்னும் நூல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றன. இம் மன்னரால் ஆக்கப்பட்ட ஊரும் ஒன்று திரையனது ஊர் என்று நன்னூல் மயிலை நாதர் உரை கூறுகிறது:

நற்றிணையில் இளந்திரையன் பாடிய பாடல்களால் தலைவன் தலைவியருடைய அன்பின் மாட்சிகள் தெரிய வருகின்றன. ஓர் இடத்தில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்தபோது கார்காலத்தில் வந்து விடுவதாகத் தலைவிக்கு உறுதிகூறிப் புறப்பட்டான். கார் காலமும் வந்தது. மழையும் பெய்தது. அதன் காரணமாகப் பிடவ மலரும், கொன்றைப் பூவும், கோடல் அலரும் மலர்ந்து தோன்றின. இவற்றைக் கண்ட தலைவி “இன்னமும் தலைவர் வந்திலரே” அவர் கூறிச் சென்ற கார்ப்பருவமும் வந்து விட்டதுவே” என்று கூறி வருந்தும்போது, தோழி “மாதே இது கார்ப்பருவம் அன்று. மேகம் பருவம் அல்லாத காலத்தில் கடல் நீரை முகந்து கொண்டு தாங்கமாட்டாமல் ஈண்டுப்

பொழிந்தது. அந்நீரைப் பெற்ற மலர்கள் மலர்ந்தன. அங்ஙனம் இருக்க, நீ எப்படி இதனைக் கார்ப்பருவம் என்று கருதலாம்?'' என்று கூறும்போது தலைவியை ஆற்றுவிக்க வேண்டுமென்ற கருத்துக்கொண்டு மேகத்தை ''மதியின்று மறந்து கடல் முகந்த கமம் சூல் மாமழை,'' என்று கூறியிருப்பது சுவை தருவ தாகும். அதாவது அறிவில்லாமல் மேகம் கடல் நீரை முகந்து கருவுற்றது என்பதாம். அதே பாடலில் வெயிலின் பரப்புக்கு உவமை கூறுகையில் ''துகில் விரித்தன்ன வெயில்'' என்று ஆசிரியர் கூறுவதைப் படித்து இன் புறல் வேண்டும். மற்றொரு பாடலில் கடற்கரை யில் நண்டுகள் அலையால் உந்தப்பட்டுக் கரை யினை அணுகும்போது, அதனைப் பிடிக்க இளம் பெண்கள் முயன்று ஓடுதற்குள் அந் நண்டு ஓடி வளையில் ஒளிந்துகொண்டபோது வளைந்து நிற்பதையும் இக் கவிஞர் கவினுறத் தெரிவிக்கப்புக்க போது ''ஆடுவரி அலவன் ஓடுவயின் ஆற்றுது அசைஇஉள் ஒழிந்த வசை தீர் குறுமகள்'' என்பர்.

புறநானூற்றில் இப்புரவலப் புலவர் கூறி யுள்ள கருத்தினையும் கருதுவோமாக. அப் பாடல் அரசர்கள் அரசினை எம்முறையில் நடத்தவேண்டும் என்ற குறிப்பினை அழகு படக் கூறுகிறது. நேர்முகமாகக் கூறின் தம்மை ஒத்த மன்னர் ''இவனோ நமக்கு அறிவு கொளுத்துபவன்?'' என்று சினம்

கொள்ளக்கூடும் என்று கருதியோ, அன்றி, வேறு எந்தக் காரணத்தாலோ உவமையாகவே கூறி உவமேயத்தால் தாம் கூறக் கருதிய கருத்தினை நம்மையும் ஏனையவரையும் யூகித்து அறியுமாறு செய்யுளை அமைத்து இருப்பது இவரது நுண்ணறிவுத்திறனை நன்கு புலப்படுத்துவதாகும். " நல்ல உருளையைக் கொண்ட வண்டியைச் செலுத்துவோன் விழிப்புடன் நன்முறையில் செலுத்துவானேயானால், தனக்கும் ஊறுபாடு எய்தப் பெருதவனும் பிறர்க்கும் தீங்கினை விளைவிக்காதவனும் வழியைக் கடந்து செல்வான். அவ்வாறு இன்றி அச் சகடத்தினைத் தாறுமாறுகச் செலுத்திஞல், அவன் தனக்கும் தீங்கு ஏற்படுத்திப் பிறர்க்கும் இன்னலை விளைவித்துச் சகடத்தையும் துன்பத்திற்கு உள்ளாக்குவன்" என்பதே இப்புலவர் புறநானூற்றில் புகன்ற பாட்டின் பொருள். இதன் உள்பொருள் காவலாகிய வண்டியினைச் செங்கோன்மையாகிய நெறியில் செலுத்தாதுபோஞல், பகையாகிய சேற்றில் காவல் சாகாடு அழுந்தித் தனக்கும் தன் கீழ் வாழ்வார்க்கும் பல தீக்கேடுகளை மேன் மேலும் தரும் என்பதாம்;

" காவல் சாகாடு உகைப்போன், மாணின்
ஊறுஇன்ருகி ஆறு இனிது படுமே;
உய்த்தல் தேற்ருன் ஆயின், வைகலும்
பகைக்கூழ் அள்ளல் பட்டு
மிகைப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே"

என்ற பாடலில் மேல்கூறிய கருத்துக்களை நன்கு தெரிந்துகொள்க.

இவ்வாறு அரசர்களாய் இருந்தவர் அருங்கவி பல புனைந்து மக்களுக்கு அறிவு கொளுத்தியுள்ளார். அரச பொறுப்பைமட்டும் பாராது, அரச குடியினில் பிறந்துவிட்டோம் என்று இறுமாந்து, அறிவு மதுகை இன்றி வாழ்நாள் கழிக்காது, தாமும் அறிவுசான்ற புலவர்களாகப் பொலிந்து இன்கவிகள் பல இயற்றிய பண்பு தமிழ்நாட்டின் தனிப்பண்பாகும். இன்னணம் கவிபாடும் கவிஞராய் மன்னர்கள் பலர் விளங்கியதால்தான் இவ்வரசர்களும், நல்லிசைப் புலவர் வரிசையில் வைத்து எண்ணப்பட்ட பெருமை பெற்றனர். இவர்களது அறிவுத்திறனை மேலும் மூல நூலில் முழுமையும் கண்டு மூதறிவு பெறுவீர்களாக!

## பயிற்சி

கீழ்வரும் தலைப்புக்கள் ஒவ்வொன்றையும் பற்றித் தனித் தனிக் கட்டுரையாக இரண்டு பக்கங்களுக்குக் குறையாமல் எழுதுக.

### I பாலைபாடிய பெருங் கடுங்கோ

1. பாலைபாடிய பெருங் கடுங்கோ என்னும் பெயரை நன்கு விளக்குக.

2. இவர் பாடியுள்ள பாடல்களின் சீரிய கருத்துக்களை விளக்கமுற எடுத்துக் காட்டுக.

### II சேரமான் கணைக்கால் இரும்பொறை

1. மானம் என்பதைத் தலைப்பாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக.

2. சேரமான் கணைக்கால் இரும்பொறை என்பார் யார்?

3. இவர் மானம் உடையவர் என்பதை உதாரணந் தந்து நிலை நிறுத்துக.

### III சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

1. பிரிவு என்பது எவரையும் கலக்கச் செய்யவல்லது என்பதை நன்கு எடுத்துக் காட்டுக.

2. "மாக் கோதை" என்பார் பெயர்க்குமுன் கொடுக்கப்பட்ட அடைமொழிகளால் நீ அறிவன யாவை?

### IV சோழன் நல் உருத்திரன்

1. சோழன் நல் உருத்திரன்பால் அமைந்த இயல்புகள் யாவை?

2. இவர் ஆயர் இயல்புகளைப் பற்றி நமக்கு அறிவிப்பன யாவை?

## V சோழன் நலங்கிள்ளி

1. சோழன் நலங்கிள்ளியின் இயல்புகளை விளக்கமுறத் தருக.

2. இவர் ஒரு பெருவீரர் என்பதை நிறுவுக.

## VI இரும்பிடர்த் தலையார்

1. கரிகால் பெருவளத்தானைப் பற்றி நீ அறிந்து கொண்டவை எவை?

2. இரும்பிடர்த் தலையார் யாவர்? அவர் இப்பெயர் பெறக் காரணம் யாது? இவரால் பாடப்பட்ட மன்னனைப் பற்றி நீ அறிந்தவை எவை?

## VII கோப்பெருஞ் சோழன்

1. பிசிராந்தையாரைப் பற்றி நீ என்ன அறிகின்றனை?

2. கோப்பெருஞ் சோழருக்கும் பிசிராந்தையார்க்கும் இருந்த நட்புரிமையை எடுத்துக் காட்டுக.

3. பொத்தியாரும் கோப்பெருஞ் சோழரின் நண்பரே என்பதை நிலை நிறுத்துக.

## VIII சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

1. கிள்ளிவளவன் யார் யாரால் பாடப்பட்ட பெருமை பெற்றவர்?

2. கிள்ளிவளவன் புலவர்களின் அறவுரைகட்குச் செவி கொடுப்பவர் என்பதை இரண்டு உதாரணங்களால் விளக்கிக் காட்டுக.